Registered as a News Paper in Sri Lanka.

பக்கங்கள்: 06

3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY ● மக்கள் தினசரி ●

நாதம் 01 பிரமோதூத ஹு வைகாசி மீ 14 ஆம் உ திங்கட்கிழமை (28 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹ 03 ஓசை 99

## இந்தியாவும் - பாகிஸ்தானும் அணு ஆயுதப் போருக்கு ஆயத்தம்

(லண்டன்)

இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுத யுத்தத்துக்குத் தயாராகி வருகின்றன. இது பற்றி அமெரிக்காவும் சோவியத்யூனியனும் கவலையுடன் எச்சரிக்கையடைந்துள்ளதாக லண்டன் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எப். 16 ரக யுத்த விமானங்களில் பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் பொருத்துவதையும் அணு ஆயுத உற்பத்திக்கு பாகிஸ்தான் ஆயத்தங்கள் செய்து வருவதையும், உளவு பார்க்கும் செய்மதிப் படங்கள் மூலம் தகவல் கிடைத்திருப்பதாக லண்டன் ''சண்டே ரைம்ஸ்'' நிருபர் தெரிவிக்கிறார். இதே சமயம் இந்தியாவும் அணு ஆயுத உற்பத்தியில் இறங்குவதற்கு ஆயத்தங்கள் செய்து வருவதாக சோவியத் மூலம் அமெரிக்காவுக்குத் தகவல் கிடைத்திருப்பதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை கூறுகின்றது. இந்தியா - பாகிஸ்தான் அணு ஆயுத யுத்தத்திலீடு (6 ஆம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரின் முதலாவது மகளிர் மகாநாடு நேற்று வின்ஸர் திரையரங்கில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசாவையும், கட்சியின் உப செயலாளரும், மகளிர் முன்னணியின் பொதுச் செயலாளருமான சுந்தரியும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீத்தா ஆகியோர் உரையாற்றுவதையும், ஏனைய மகளிர் முன்னணி செயற்குழு உறுப்பினர்கள் மேடையில் வீற்றிருப்பதையும் படத்தில் காணலாம்.

## இன்று புலிகள் - ஹமீத்; முப்படை அதிகாரிகள் பேச்சு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் இன்று காலை யாழ்ப்பாணம் வருகின்றார். இச்சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் சார்பில் அதன் மக்கள் முன்னணியின் தலைவர் கோ. மகேந்திரராசாவும், செயலாளர் யோகரெட்ணம் யோகியும், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கலந்து கொள்வார்கள் எனத்தெரிகின்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகளினால் மீண்டும் மாகாணசபை கலைப்பு, ஆறாவது திருத்தச்சட்ட நீக்கம் தொடர்பான அம்சங்கள் வலியுறுத்தப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. மேலும் கடந்தவார பேச்சுவார்த்தையின் பலாபலன்களும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை இன்று மாலை பலாலியில் முப்படை அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெறவுள்ளது. இப்பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலி (6ஆம்பக்கம் பார்க்க)

# ஆயுதக் கையளிப்பு நிபந்தனையால் அரசு - புலிகள் பேச்சுக்கள் முறியும்!

## விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கலிகைச் சந்தியில் மினிபஸ்சும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இருவர் படுகாயமடைந்தனர். இவ்விரு வாகனங்களும் சேதத்திற்குள்ளாகியது.

(6ஆம்பக்கம் பார்க்க)

## தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் குயின்ஸ் பெருந்தோட்டத்தில் ஆயிரத்து எண்ணூறு தோட்டத் தொழிலாளர் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.



## விடுதலைப்புலிவட்டாரங்கள் கருத்து

(யாழ்ப்பாணம்)

ஆயுதங்களைக் கையளிக்குமாறு விடுதலைப் புலிகளை அரசு பணித்தால் அல்லது தேர்தலுக்கு - முன் நிபந்தனை விதித்தால் அரசு - புலிகள் பேச்சுக்கள்

## கோட்டை இராணுவ முகாமில் காவல் அரண்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நூற்றுக்கணக்கான இரா நீற் கற்களையும் மண்மூடைகளும் கொங்கி கொண்டு

# அரசு - புலிகள் பேச்சுக்கள் முறியும்!

## விடுதலைப்புலிவட்டாரங்கள் கருத்து



(யாழ்ப்பாணம்)

ஆயுதங்களைக் கையளிக்குமாறு விடுதலைப் புலிகளை அரசு பணித்தால் அல்லது தேர்தலுக்கு - முன் நிபந்தனை விதித்தால் அரசு - புலிகள் பேச்சுக்கள் முறிவடையுமென விடுதலைப் புலிகளின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன கடந்த ஒரு வருடமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென விடுதலைப் புலிகளை அரசு கேட்கவில்லை என்றும், ஆயுதங்களை சரணடைய வேண்டுமென சிறீலங்கா அரசு உத்தியோகபூர்வமான முறையில் கேட்டுக்கொண்டால் அல்லது அழுத்தம் போட்டால் அரசுடனான பேச்சுக்களை துண்டித்துக்கொள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் தீர்மானிக்கலாமென நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கையளித்தால் தேர்தலில் பங்குபற்றலாம் எனத் திரு. ரஞ்சன் விஜேயரத்னா சொல்லியிருப்பதாக எமது நிருபர் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திடம் கேட்டபோது, ''நாம் ஜனாதிபதியுடனும் அமைச்சர் ஹமீத்துடனும் பேசி வருகிறோம். கடந்த ஒரு வருடப் பேச்சுவார்த்தைகளின்போது ஆயுதப்பிரச்சினையே எழவில்லை தேர்தலுக்கு ஆயுதக்கைய

(6ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் போரூட் அதிகாரிகள்

(முல்லைத்தீவு)

போரூட் நிறுவன அதிகாரிகள் முல்லை மாவட்டத்தில் உள்ள கருநாட்டுக் கேணி, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளைச் சென்று பார்வையிட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியை விருத்தி செய்ய சுகாதாரதிணைக்களத்துடன்பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியாஸ்பத்திரியை திட்டமிட்ட ரீதியில் வரும் ஐந்தாண்டுகளில் தற்போதுள்ள குறைபாடுகளை தீர்த்து வைப்பதற்கான சில ஆலோசனைகளை வழங்குவதற்கென யாழ் பெரிய ஆஸ்பத்திரி நிர்வாக அதிகாரிகள் உட்பட எட்டுப் பேர் அடங்கிய ஒரு குழு கொழும்பிற்கு விஜயம் செய்து சுகாதாரத் திணைக்களத்துடன் பேச்சுக்களை நடத்தி தற்போது திரும்பியுள்ளது.

கொழும்பில் சுகாதாரத் திணைக்களத்துடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் இலங்கையில் உள்ள அனைத்து போதனா வைத்திய அதிகாரிகளும் பங்குபற்றி இருந்ததாகவும் இப்போதனா வைத்தியசாலை அதிகாரிகளால் தற்போது சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகளுக்குமுன்னுரிமை அடிப்படையில் கவனம் செலுத்தப்படும் என கொழும்பில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தங்கக் கடத்தல் காரர் கட்டுநாயக்காவில் கைது!

(கொழும்பு)

விமான மூலம் வெள்ளியன்று சிங்கப்பூரிலிருந்து கொழும்பு வந்து சேர்ந்த 55 வயதான இலங்கையர் ஆறு தங்கத் துண்டுகளைத் தன்வசம் மறைத்து வைத்திருந்தபோது கட்டுநாயக்கா சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டார்.

மற்றவர்களுக்காகத் தங்கம் கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இவரைச் சந்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 165 பேர் விடுதலை

(காலி)

கடந்த சில வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் 165 பேர் நேற்றுக் காலை காலி நகர மண்டபத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

## கோட்டை இராணுவ முகாமில் காவல் அரண்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் புதிய புதிய காவல் அரண்களை அமைப்பதிலும் பழையவற்றை புதுப்பிப்பதையும்யாழ் கோட்டை இராணுவ முகாமில் காணக்கூடியதாகவுள்ளது.

மண்மூடைகளும் கொங்கிறீற் கற்களையும் கொண்டு இந்த காவல் அரண்களை அமைத்துவருவதுடன் அமைக்கப்பட்ட காவல் அரண்களின் உள்ளேயும் வெளியேயும் எந்நேரமும் காவல்க் கடமை

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஏயர் லங்கா விமானத்தினுள் சர்வதேச கடத்தற்காரர் கைது!

(கொழும்பு)

எயர் லங்கா விமானமூலம் வெளிநாடொன்றுக்கு தப்பிச் செல்ல முயன்ற போதைவஸ்து கடத்தல் பேர்வழி ஒருவர் விமானத்துக்குள் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சமயம் இந்நபரிடம் தென்னமெரிக்க நாடொன்றின் கடவுச்சீட்டு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நபரை கைது செய்ததும் இவருடைய மேலதிகவிபரத்தை சர்வதேச ரீதியாக திரட்டும் நோக்குடன் சர்வதேச பொலிஸ் படையான இன்ரர்போலிடம் இலங்கைப் பொலிசார் உதவி

(6ஆம் பக்கம் பார்க்க)

வாகனங்களும் சேதத்திற்குள்ளாகியது.

(6ஆம்பக்கம் பார்க்க)

## தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் குயின்ஸ் பெரும் தோட்டத்தில் ஆயிரத்து எண்ணூறு தோட்டத் தொழிலாளர் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

ஒரு லட்சம் தோட்டத் தொழிலாளர்களை கட்டாயமாக நாடு கடத்துவதை எதிர்த்தும் சம்பள உயர்வு கோரியும் குடியிருப்பு வசதிகள் வேண்டுமென்று கோரியும் இவர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

## ஆயுதம் பிடிபட்டது

(கொழும்பு)

டிகவெல என்ற இடத்தில் ஒரு கடையில் சோதனை நடத்தியபோது எழுபத்தைந்துதுப்பாக்கிகள்மறைத்து வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. கடைக்காரரும் மற்றுமொருவரும் விசாரணைக்காகக் கொண்டுசெல்லப் பட்டனர்.

## 'பெண்களின் பங்களிப்பு மூலமே எமது போராட்டம் முழுமைபெறும்'

### விடுதலைப்புலிகள்மகளிர் முன்னணி யாப்பு மாநாட்டில் மகேந்திரராசா

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு முக்கியமானது. பெண்கள் முழுமையாகப் பங்களிக்கும் போதுதான் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் முழுமை பெறுகிறது. தேசிய விடுதலை எனும் போது அதில் பெண்ணினத்தின் சமூக விடுதலையும் இணைபிரியாத அங்கமாக அமைகிறது. எமது தேசிய விடுதலைப் போராட்டமும் பெண் விடுதலையை ஒரு பிரதான குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தயா) நேற்று யாழ் நகரிலுள்ள வின்சர் தியேட்டர் மண்டபத்தில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் ஒற்றுமைக்காக உழைத்த முற்போக்கு சிந்தனையாளர் ஆதம்பாவா அழிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

ஆதம்பாவா ஒரு முற்போக்குச் சிந்தனையாளர். ஒரு-தன்னலமற்ற தலைவர் முஸ்லிம் மக்களின் நலனை, அவர்களது சுபீட்சத்தை இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர், தமிழர் முஸ்லிம் ஒற்றுமைக்காக இடையறாது பாடுபட்டவர், இவ்வாறான எமது அருமைத்தோழர் கொலையுண்டுவிட்டார். தமிழர் முஸ்லிம் ஒற்றுமைக்குதுணைநின்ற இன்னொரு அற்புத மனிதர் அழிக்கப்பட்டு விட்டார் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் ஆதம்பாவா கொலை தொடர்பாக விடுத்த இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளது.

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இரங்கல் செய்தி

ஏன் இந்தக்கொலை? என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இந்த அஞ்சலிச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

ஏன் இந்தக் கொலை? இது யாரால் செய்யப்பட்டது? எந்த நோக்கிற்காக செய்யப்பட்டது? இந்தக் கொடூரக் கொலையின் பின்னணியிலுள்ள தீய சக்திகள் யார்?

(6ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண ரயில் பொதிகள் கட்டணம் இரு மடங்கு

(யாழ்ப்பாணம்)

கடுகதி இரயிலுக்கு மட்டும் விதிக்கப்பட்டுவந்த பொதிகள் அனுப்புவதற்கான இரண்டு மடங்கு கட்டணம் தற்போது தபால் இரயிலுக்கும் இதேபோல் இரண்டு மடங்கு கட்டணம் அறவிடப்படுகிறது.

வடபகுதியிலிருந்து புகையிரதங்களின் மூலம் கொழும்புக்கு பொருட்கள் அனுப்பி வைப்பது அதிகரித்து வரும் இவ் வேளையில் புகையிரத இலாகாவால் அனைத்து பொதிகள் அனுப்புவதற்கும் கடுகதிரயிலில் அறவிடுவதைப் போன்று இரு மடங்கு ரயில் கட்டணம் சாதாரணமான தபால் ரெயிலிலும் அறவிடப்பட்டு வருகின்றது.

இதனால் தற்போது தபால் இரயிலில் பொதி அனுப்புவது

(6 ஆம் பச்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

புதிய அச்சடிக்கும் திருமணக் கார்ட்டுகள், சகல டிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய ஸ்ரீ காந்த் புத்தகசாலை, மின்சார நிலையவீதி. பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (B/1002)

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட CD 50. HONDA CHALY, YAMAHA. MATE 50 விற்பனைக்கு உண்டு. Our Lady Store, Hospital Road, Jaffna. (R.311)

தேவை

மோட்டார் சைக்கிள் விற்கும் கடைக்கு ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த பெண் பிள்ளை தேவை. தொடர்பு கொள்ளவும். 601, Hospital Road. Jaffna. (R.311)


## சிரமதானம் மூலம் வீதிகள் திருத்தம்

(அம்பாறை)

சவளக்கடை, சொறிக் கல்முனை, ஆறு ஏழாம் இறைகள் ஆகிய இடங்களில் பல காலமாகக் கவனிக்கப்படாதிருந்த பாடசாலை வீதிகள் மற்றும் சில வீதிகள் விடுதலைப் புலிகள் பிரதேசப் பொறுப்பாளர்கள் முத்தலிப்பு, ராஜ்குமார் தலைமையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு சிரமதானமூலம் துப்புரவாக்கினர்.

# புலவர்மணி, பண்டிதமணி இணைப்பு இதயபூர்வமானது

(மட்டக்களப்பு)

புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகிய இருவருக்குமிடையிலான இணைப்பு, பிணைப்பு இதயபூர்வமானதாகும்.

இவ்வாறுஅண்மையில் மட்டு நகர மண்டபத்தில் புலவர்மணியின் ''விபுலானந்தர் மீட்சிப்பத்துநூல் வெளியீட்டு விழா பண்டிதமணியின் நினைவு மலர்'' செந்தமிழ் களஞ்சியம்'' நூல் அறிமுக விழா ஆகிய வற்றில் கருத்துரையாற்றிய கல்விப்பணிப்பாளர் திரு. கு. சோபசுந்தரம் குறிப்பிட்டார்.

மகாவித்துவான்எப். எக்ஸ். ஸி. நடராசா தலைமையிலான இவ் வைபவம் புலவர்மணி பணி மன்றம் ஏற்பாடு செய்தது.

அவர் மேலும் உரையாற்றுகையில் அரசியல் விடுதலை பெறமுன்பு கலை கலாசாரப் பண்பாடு விடுதலை பெற வேண்டும் என்ற கருத்து இருவரும் கொண்டிருந்தனர்.

இரு மணிகளும் இரு பிரதேசங்களின் ஆத்மீகம், கல்வி, கலாசார ரீதியாக ஒன்றிணைந்தவர்கள் என்றார்.

'புலவர்மணி நூல்கள்' என்ற தலைப்பில் இரா. நாகலிங்கம் பேசுகையில்,

நாவலரும் விபுலானந்தரும் இரட்டையர்களாகவே தமிழிற்கும் சைவத்திற்கும் பணி புரிந்தவர்கள். புலவர்மணியும் பண்டித மணியும் இரட்டையர்களாகவே இப் பணியைத் தொடர்ந்துள்ளனர்.

மேற்படி இரட்டையர்கள் மேலும் உருவாகவேண்டும்என்பதே எமது பிரார்த்தனையாகும் என்றார்.

திரு ஆ. அரசரெத்தினம் ''விபுலானந்தர் மீட்சிப்பத்து' என்ற தலைப்பில் பேசுகையில்

நெருப்புக் காய்ச்சல் காரணமாக சுவாமி விபுலானந்தர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரம் இத் தகவல் கேட்டு தன்குருநாதர் நலமுடன் திரும்ப வேண்டுமென புலவர்மணி பாடிய பாடல்கள் தான் விபுலானந்தர் மீட்சிப்பத்து'' ஆகும்.

புலவர்மணி, பண்டிதமணி இருவரும் காவிய பாடசாலையில் ஒன்றாக படித்த சகபாடிகள். ஒரு மரத்தில் ஒரே கிளையில் ஒருமித்துப் பழுத்த பழங்கள் என புலவர்மணி தனது ''உள்ளதும் நல்லதும்'' என்ற நூலில் விளக்கியுள்ளார் என்றார்.

பண்டிதமணி நினைவு மலர் எனும் தலைப்பில்கலாநிதி சி. மௌனகுரு பேசுகையில்

ஈழத்திருநாட்டில் இலக்கிய உலகில் மூன்றுமலர்கள் கண்ட அறிஞர் பண்டிதமணி. சிறந்த இலக்கியவாதி தத்துவ ஞானி சிந்தனை வாதி, ஆராய்ச்சியாளர்.

ஈழத்தமிழ்இலக்கியத் தனித்துவத்தை வலியுறுத்தியவர். இவரது தனித்துவமான பாதைதான்நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுத்தது என்றார்.

வித்துவான் க.சொக்கலிங்கம் ''செந்தமிழ் களஞ்சியம்'' என்னும் தலைப்பில் பேசுகையில்

பண்டிதமணியின்இலக்கிய வழியிலிருந்து அவர் இலக்கியத்தை எப்படி காண்கிறார் என்பதற்குரிய உதரணங்களை நாம்காணலாம்.

எமது அடித்தளம் எமக்கு பாரமாக இருக்கிறது என கருதுபவர்களிடமிருந்து பண்டிதமணி மாறுபட்டவர்.

பண்டிதமணியின் ஆக்கமும் சைவமும், தமிழும் என்ற வட்டத்திற்குள் இருந்து வெளியானவை என்றார்.

கலாநிதி இ. பாலசுந்தரம் ''பண்டிதமணியின் நூல்கள்'' என்ற தலைப்பில் பேசுகையில் புலவர்மணியை நாம் கலாசாரத்தை வைத்துக் கொண்டும் ,பண்டிதமணியை கந்தபுராணக் கலாசாரத்தை வைத்துக் கொண்டும் அணுகுதல் வேண்டும்.

நாவலர் பாடசாலையில் பண்டிதமணி, புலவர்மணி இணைந்து கல்வி கற்றவர்கள்.

பண்டிதமணியின் நூல்கள் சிறப்பான வசனநடை, இலக்கிய பாரம்பரியம், தத்துவம், ரசனை உடையன என்றார்.

வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர் ஆர். யோகநாதன் திரு. இ ஜே. சற்குணராஜா, அரச அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆசிரியமணி அ பஞ்சாட்சரம் பதிலுரை கூறினார். (37

## அரசு வழங்கும் கடன்களை கூ. முறையில் பயன் படுத்துக

(கிளிநொச்சி)

வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பல நன்மைகளை அடைந்து வரும் மக்கள் அரசு வழங்கும் கடன்களை கூட்டுறவு முறையில் பெற்று பயன் பெறும் வகையில் அப் பணத்தைப் பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

கிளிநொச்சி கால்நடை வைத்தியசாலையில் நடைபெற்ற ஜெயந்திநகர் கிராமிய கால்நடை வளர்போர் கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய சாவகச்சேரி, பூநகரி கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் ஸ்ரீ ஜெயக்குமார் மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி ஆர். தங்கராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செல்வன் திரவியச்செல்வன் தலைமையில் ஐந்துபேர் கொண்ட ஜெயந்திநகர் கிராமிய கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி, பூநகரி கால் நடை வைத்திய அதிகாரி ஸ்ரீ ஜெயக்குமார் அங்கு தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் மூலம் வருவாயைப் பெறுவதற்கு அரசு பல கடன் திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது. அத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் பணத்தை பயன்படுத்தி வாழ்க்கையை வளம் படுத்திக்கொள்ள வேலையற்றிருக்கும் சகல இளைஞர், யுவதிகளும் முன் வர வேண்டும் என்றார்.

மேலும் இளைஞர், யுவதிகள் கூட்டுறவு முறையில் இயங்கி பல்வேறு நன்மைகளை பெற்று முன்னேறி தம்மையும், தமது நாட்டையும் வளம் படுத்த முயற்சிக்க வேண்டும். உங்கள் முன்னேற்றத்திற்கான சகல வழிகளையும் காட்டித்தர வல்லவர் உங்கள் கால்நடை வைத்தியர் என்றார். (49)

## மாதம் இருமுறை கோழிக்குஞ்சு விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கால்நடை வைத்தியசாலையில் வைத்து மாதம் இரு முறை ஒரு நாள் கோழிக்குஞ்சு வழங்கப்படுகிறது.

ஒரு நாள் கோழிக்குஞ்சை பெற விரும்புபவர்கள் கிளிநொச்சி கால்நடை வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளும்படி மேற்படி வைத்திய அதிகாரி திருமதி பி. தங்கராசா தெரிவித்தார்.

கால்நடை வளர்ப்பு,கோழி வளர்ப்பை ஊக்குவிக்கு முகமாக இவ் வைத்தியசாலை பல திட்டங்களை வகுத்துச் செயல்பட்டு வருகிறது.

கால்நடை, கோழி ஆகியவற்றை வளர்க்க விரும்புபவர்களுக்கு இது சம்பந்தப்பட்ட பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. (94)


**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·00, 2·00, 4·45, 7·00, 9·45
Terence Hill Bud Spence
**I AM FOR THE HIPPOPOTAMUS**

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி,ராதிகா, ரகுவரன் நடித்த
**ஊர்க்காவலன்**
50-வது நாளை நோக்கி

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா அசோகன் நாகேஸ் V. K. ராமசாமி தேங்காய் சீனிவாசன் சுருளிராஜன் நடித்த
**திருடி**
B 878

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2–30. 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது.

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30,2-30, 6-30,9-30
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி4-00, 6-45, 9–30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10–30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, ரேவதி, சுரேஷ், மனோரமா, ஜெய்சங்கர், வை.ஜி. மகேந்திரன் நடித்த
**மருமகள்**
அடுத்த வெளியீடு
**மாவீரன்**
(புதிய பிரதி)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30 7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00 7-30 9-00
பயங்கரச் சண்டைகள் நிறைந்த படம்!!......
FISTFULL OF DOLLERS:-
(Cinemascope)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

வீடியோ படப்பிடிப்புத்துறையில் பத்து வருடகால அனுபவம்மிக்க முன்னோடிகளான
**புலவர் வீடியோ நிறுவனத்தினர்**



மற்றும் சில வீதிகள் விடுதலைப் புலிகள் பிரதேசப் பொறுப்பாளர்கள் முத்த லிப்பு, ராஜ்குமார் தலைமை யில் ஆயிரக்கணக்கான மக் கள் கலந்துகொண்டு சிரம தானமூலம் துப்புரவாக்கினர்.

கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி திருமதி ஆர். தங்கராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செல்வன் திரவியச்செல்வன் தலைமையில் ஐந்து பேர் கொண்ட ஜெயந்திநகர் கிரா மிய கால்நடை வளர்ப்போர்

களை பெற்று முன்னேறி தம் மையும், தமது நாட்டையும் வளம் படுத்த முயற்சிக்க வேண்டும். உங்கள் முன்னேற் றத்திற்கான சகல வழிகளை யும் காட்டித்தர வல்லவர் உங்கள் கால்நடை வைத்தியர் என்றார். (49)

மாதம் இரு முறை ஒரு நாள் கோழிக்குஞ்சு வழங்கப்படு கிறது.

ஒரு நாள் கோழிக்குஞ்சை பெற விரும்புபவர்கள் கிளி நொச்சி கால்நடை வைத்திய சாலையுடன் தொடர்புகொள் ளும்படி மேற்படி வைத்திய அதிகாரி திருமதி பி. தங்க

மாக இவ் வைத்தியசாலை பல திட்டங்களை வகுத்துச் செயல்பட்டு வருகிறது.

கால்நடை, கோழி ஆகிய வற்றை வளர்க்க விரும்புபவர் களுக்கு இது சம்பந்தப்பட்ட பயிற்சிகளும் வழங்கப்படுகின் றன. (94)

கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது.

(புதிய வெளியீடு)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

வீடியோ படப்பிடிப்புத்துறையில் பத்து வருடகால அனுபவம்மிக்க முன்னோடிகளான




✵✵✵ புலவர் வீடியோ நிறுவனத்தினர் ✵✵✵

புதிதாக அறிமுகப்படுத்துகிறார்கள்

CHROMA KEY VIDEO MIXER

குறோமா கீ வீடியோமிக்ஸர்

R. G. P. PRISM SYSTEM PROFESSIONAL QUALITY

✵ நவீனத்துவம் ✵ கலைத்துவம் ✵ தனித்துவம் மிக்க
வீடியோ கலப்பு (Mixing) படப்பிடிப்பு தொழில்நுட்டம்

- J. V. C. (Colour Special Effects Generator Video Mixer)
- C. C. D. Video Camera
- HITACHI ✵ SONY ✵ NATIONAL ✵ J. V. C.

ஆகிய உலகின் தரம் மிகுந்த கருவிகளின் மூலம் 46 "எபெக்ஸ் மிக்ஸரில்" உங்கள் வாழ்வின் நினைவில் நிறைந்த நிகழ்ச்சிகளை நிரந்தர பதிவுகளாக்கி

சிங்கப்பூர், ஜேர்மனி, ஹொங்கொங், கனடா மற்றும் வெளிநாடுகளின் இயற்கை வண்ணக் காட்சிகள் சேர்த்து வாழ்நாள் முழுவதும் அதன் உணர்வுகளை அனுபவிக்க வைக்கும் அற்புதக் கலைப் படைப்புகளாக்கித் தருபவர்கள்....

# புலவர் வீடியோ

கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.




B 876

# இந்திய தூதரகம் மூடுவதற்கு பிஜி இந்தியர் எதிர்ப்பு

(சுவா)

பிஜித் தீவிலுள்ள இந்திய தூதராலயத்தை மூடும் பிஜி அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து பிஜித் தீவின் தலை நகரமான சுவாவிலுள்ள இந்தியர்கள் நேற்று முன்தினம் 24 மணிநேர எதிர்ப்பு இயக்கம் ஒன்றை மேற்கொண்டனர். இதனைத் தொடர்ந்து சுவா நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

சுவாவில் 99 சத விகிதமான வியாபார நிலையங்கள் இந்தியர்களுக்குச்சொந்தமானவை. சுவாவில் கடைகளும், இந்திய சமூகத்தினர் நடாத்தும் கல்வி நிலையங்களும் பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன.

பிஜி இந்தியாவுடனானராஜ தந்திர உறவுகளைத் துண்டித்துக் கொள்ள வில்லையென்றும், எதிர் காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு இந்தியாவில்தான் தங்கியுள்ளதாக பிஜித் தீவின் பதில் பிரதமர் தெரிவித்தார்.

இந்தியா தனது ஆதிபத்தியத்திற் கிணங்க எம்முடன் உறவுகளை முறித்துக் கொண்டால், தாமும் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் என பதில் பிரதமர் ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். பிஜித் தீவுக்கு ஓர் தூதுவராலயம் புதுடில்லியில் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

பிஜிப் பிரதமர் சேர் கமிஸ் மாறா உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஐரோப்பா, யப்பான், தூர கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

பிஜித் தீவிலுள்ள இந்தியர்களின் நிறுவனங்கள் கடைகளையும் பள்ளிக்கூடங்களையும் மூடும்படியும், வாகனப் போக்குவரத்தை நிறுத்தும்படியும் வெள்ளியன்று இந்திய சமூகத்தினரைகேட்டிருந்தது.

இந்திய சமூகத்தினர் செறிவாக வாழும் நாட்டின் மேற்கிலும் லுட்சா ஆகிய நகரங்களிலும் பந் அனுஷ்டிக்கப்பட்டது.

பிஜித்தீவில் கரும்புத் தோட்டம் அமைந்துள்ள வடக்குத் திசையிலுள்ள லப்சா நகரில் அன்றாட வேலைகள் அமைதியாக நடைபெற்றதாக பிஜி வானொலி அறிவித்தது.

இன வாரியான ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை பிஜித்தீவில் இடைக்கால அரசாங்கம் அறிமுகப்படுத்த முனைவதாக இந்தியா அடிக்கடி பிஜியைக் கண்டித்து வந்துள்ளது.

70 பேரைக் கொண்ட பிஜி பாராளுமன்றத்தில் சுதேசிகளான பிஜி மக்களுக்கு பெரும்பான்மை ஆசனங்களை வழங்க பிஜி அரசாங்கம் ஒரு நகல் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியதே இந்தியாவுக்கும் பிஜிக்கும் இடையிலான இழுபறிக்குக் காரணமாகும்.

# ஜக்மோகன் ராஜினாமாவை அடுத்து ஜம்முவில் பெரும் ஆர்ப்பாட்டம்

## இராணுவம் சுட்டு 7 பேர் பலி

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீர் ஆளுநர் ஜக்மோகன் பதவி விலகியதை அடுத்து ஜம்முவில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளது. இவ் ஆர்பாட்டங்களில் குறைந்தது ஒன்பதுபேர் வரை இறந்துள்ளனர்.

மௌலவி பாருக்கின் கொலையைத் தொடர்ந்து இடம் பெற்ற 47 உயிர்க் கொலைகளுக்கு ஜக்மோகனே காரணம் என்ற குற்றச்சாட்டில் ஜக்மோகன் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

இதனால் இந்துக்கள் அதிகமாக வாழும் ஜம்முவில் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. வர்த்தகர்கள் கடைகளைப் பூட்டி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அத்துடன் முஸ்லிம்களையும் கடைகளை பூட்டும்படி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தை கலைக்க இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் ஜம்முவில் கடமையாற்றும் வழக்கறிஞர்கள் ஜக்மோகனை மீண்டும் ஆளுநர் பதவியில் இருத்தும் வரைதாம் வேலைக்கு திரும்பமாட்டோம் என அறிவித்துள்ளனர்.

அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பணிமனைகளையும் தாக்கினர்.

அதேவேளை இந்தியப்பிரதமமந்திரி வி.பி. சிங் ஜம்மு காஷ்மீர் ஆளுநர் ஜக்மோகன் தாமாகவே ராஜினாமாச் செய்தார் என்றும், ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் இருந்து திருப்பி அழைப்பதில் மத்திய அரசு நெருக்குதல் செய்தது என்று கூறுவதை அவர் வன்மையாக கண்டித்தார்.

# 30 ஆண்டுகளின் பின் பர்மாவில் தேர்தல் நடைபெறுகிறது

(ரங்கூன்)

பர்மாவில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளின் பின் முதல் தடவையாக நேற்று தேர்தல் நடைபெற்றது.

485 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்திற்கான தேர்தலே நடைபெறுகின்றது.

2000க்கும் கூடுதலான வேட்பாளர்கள் இந்தத்தேர்லில் போட்டியிடுகிறார்கள் 93 அரசியல் கட்சிகள் பங்கு பற்றுகின்றன

தேர்தல் வாக்கெடுப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை ரங்கூனில் இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று சோதனை செய்து வருகிறார்கள் மேலும் முன்எச்சரிக்கை நடவடிக்கையாக பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

# இன விகிதாசார அடிப்படையில் 1ஆம் 2ஆம் தரஅதிபர் தெரிவு

(கொழும்பு)

இன விகிதா சார அடிப்படையில் முதலாம் தர அதிபர்களாக 437 பேரும் இரண்டாம் தர அதிபர்களாக 1750 பேரும் தெரிவு செய்யப்படுவர்.

நாளையும் நாளை மறுதினமும் இந்த நியமனங்களுக்கான தெரிவு கொழும்பில் நடைபெறும்.

இதே வேளை மூன்றாம்தர அதிபர்களாக 1500 பேர் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். இத் தெரிவிற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அத்துடன் கடந்த 19 ஆம் 20 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட முதலாம்தர தமிழ் முஸ்லிம் அதிபர்களுக்கானநேர்முக தெரிவு மீண்டும் அடுத்த மாதம் ஆறாந் திகதி நடைபெறும்.

குறிப்பிட்ட தினங்களில் இடம் பெற்ற தெரிவில் 12 பேர் சமுகம் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சீனா குற்றச்சாட்டு

# ரஷ்ய உள்விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுகிறது

(பீக்கிங்)

அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே அடுத்த வருடம் உச்சிமகாநாடு நடக்கவிருக்கும் வேளையில் சீனா இரு வல்லரசுகளுக்கும் இடைப்பட்ட உறவு பற்றி கருத்து வெளியிட்டு இருக்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து ஆழமான பிரிவுகளும். சந்தேகங்களும் இருப்பதாக சீனாவின் அதிகார பூர்வமான செய்தி நிறுவனமான நியூசைனா செய்தி நிறுவனம் வெளியிட்டு இருக்கிறது.

அமெரிக்கா பால்டிக் குடியரசுகளான லித்வேனியா, எஸ்தோனியா, லட்வியா போன்ற நாடுகளின் தன்னாட்சிக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் சோவியத் யூனியனின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும் நியூசைனா செய்தி நிறுவனம் குற்றம் சாட்டி இருக்கிறது.

# “கறுப்புப்பூனையே மௌலவி பாருக்கை கொலை செய்தது”

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் முஸ்லிம்களின் மதத் தலைவரான மௌலவி பாருக்கை இந்திய ராணுவத்தின் கரும்பூனை காமாண்டோக்களே கொன்றனர் என்று பாகிஸ்தானின் ஒபிஷியல் அசோஷியேட்டட் பிறெஸ் (A.P.P. செய்தித் ஸ்தாபனம்) தெரிவித்தது.

இக் கமாண்டோக்கள் இன்னுமொரு பிரபல மதத்தலைவரான ஆசா மௌலவியையும் கொலை செய்ய எத்தனித்தனர் என்றும் அச்செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

காஷ்மீரில் உள்ள பிரபல தலைவர்களைக் கொலை செய்வதற்கு கரும் பூனைகள் திட்டமிட்டுள்ளனர் என்றும், இது போராளிகள் மத்தியில் ஐக்கியத்தைச் சீர்குலைக்குமென கரும் பூனைகள் நம்புகின்றன என்றும் அச்செய்தி தெரிவிக்கின்றன.

# கறுப்பின பெண் முடியை வெட்டிய வெள்ளைக்கார இளைஞர்கள்

## பொலிஸார் நால்வரைத் தேடுகின்றனர்

(பாரிஸ்)

பிரான்சின் தெற்கு நகரமொன்றில் கறுப்பினப் பெண் ஒருவரின் தலைமுடியை வெட்டிய குற்றத்துக்காக நான்கு வெள்ளைக்கார இளைஞரைப் பொலிஸ் தேடிவருவதாக நேற்றுமுன்தினம் அவிங்ரன் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. 16 வயது நிரம்பிய பெண் ஒருவரைப் பிடித்துத் தலைமயிரைச் சிரைத்ததுடன் கொலை செய்யப்போவதாகவும் பயமுறுத்தியுள்ளார்களாம்.

பிரான்ஸ் கரேபியன் தீவொன்றைச் சேர்ந்த இப்பெண் சென்றவாரம் சனநடமாட்டமான வீதியில் பாண் வாங்கச் சென்ற சமயம் இச்சம்பவம் நடந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டுக் குடும்பம் ஒன்று தத்தெடுத்து வளர்க்கும் இப்பெண்ணைப்பார்த்து, ஆபிரிக்க நாட்டவர்களைத் தமக்குப் பிடியாது என்றும் அவளின் தலைமயிரை மொட்டையடிக்கப்போவதாகவும், எதிர்த்தால் கொலைசெய்துவிடுவதாகவும் அந்த இளைஞர்கள் மிரட்டியுள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னதாக பிரான்ஸ் நாட்டவர்களான செமிற்றிக் பேரினவாதிகள் அவிங்ரனில் யூதர்களின் சேமக்காலையில் உள்ள கல்லறைகளைக் கிளறியபிறகு நடந்த இரண்டாவது சம்பவம் இதுவாகும்.

பாரிஸுக்கு அருகாமையில் ஆபிரிக்கர்கள் வாழும் சேரி ஒன்றில் வெள்ளையரான துப்பாக்கி மனிதன் ஒருவன் கறுப்பினப்பெண் ஒருவரைச் சுட்டுக் கொன்றதோடு, இன்னொருவரைப் படுகாயங்களுக்கு உள்ளாக்கியுள்ளார். கொலையாளியை வலைவிரித்துதேடும் பொலிஸார், கொலைக் காரணம் பற்றித் தாம் சந்தேகப்படுவதாக நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இச் சம்பவங்களுக்கு தீவிரவாத வலதுசாரி தேசிய முன்னணியைச் சமயக்குரவர்களும் அரசியல் தலைவர்களும் கண்டித்துள்ளனர். ஜேர்மனியில் நாசிகளின் நச்சுவாயுக் கூடங்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை என்று வர்ணித்த குற்றத்துக்காக தேசிய முன்னணித் தலைவரான ஜீன்மாறிலாபென் என்பவரை அடையாளமாகத் தண்டப்பணம் வழங்கும்படி புதனன்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தென் ஆபிரிக்காவிலிருந்து வரும் கறுப்பின மக்களுக்கு புகலிடம் வழங்கவேண்டாம் என்றும், ஏலவே புலம் பெயர்ந்து பிரான்ஸில் வாழ்ந்துவருபவர்களை வெளியேற்றும்படியும் தேசிய முன்னணி பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் பிரான்சு நாட்டின் உள்துறை அமைச்சர் புதிய நாசி வெளியீடுகள் மூன்றுக்குத் தடைவிதித்துள்ளார்.

# வவுனியாவில் சைக்கிள் பாதுகாப்பு

(வவுனியா)

சைக்கிள் பாதுகாப்பு நிலையம் வவுனியா நகரசபை எல்லைக்குள் விரைவில் அமைக்கப்பட இருப்பதாக நகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சைக்கிள் திருட்டை தடுப்பதற்கும், போக்கு வரத்திற்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கும், இந்தநிலையம் அமைக்கப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை நிர்வாகமே இந்நிலையத்தை பொறுப்பேற்று நடாத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(தி)

கல்வி என்பது ஒரு இலாப

கள் தெளிவாகவில்லை.

போலவும் ஆங்கிலத்தின் முக்

# 30 ஆண்டுகளின் பின் பர்மாவில் தேர்தல் நடைபெறுகிறது

(ரங்கூன்)

பர்மாவில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளின் பின் முதல் தடவையாக நேற்று தேர்தல் நடைபெற்றது.

485 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்திற்கான தேர்தலே நடைபெறுகின்றது.

2000க்கும் கூடுதலான வேட்பாளர்கள் இந்தத்தேர்லில் போட்டியிடுகிறார்கள் 93 அரசியல் கட்சிகள் பங்கு பற்றுகின்றன

தேர்தல் வாக்கெடுப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை ரங்கூனில் இராணுவத்தினர் வீடுவீடாகச் சென்று சோதனை செய்து வருகிறார்கள் மேலும் முன்எச்சரிக்கை நடவடிக்கையாக பல அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(கொழும்பு)

இன விகிதா சார அடிப்படையில் முதலாம் தர அதிபர்களாக 437 பேரும் இரண்டாம் தர அதிபர்களாக 1750 பேரும் தெரிவு செய்யப்படுவர்.

நாளையும் நாளை மறுதினமும் இந்த நியமனங்களுக்கான தெரிவு கொழும்பில் நடைபெறும்.

இதே வேளை மூன்றாம்தர அதிபர்களாக 1500 பேர் தெரிவு செய்யப்பட இருக்கின்றனர். இத் தெரிவிற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அத்துடன் கடந்த 19 ஆம் 20 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட முதலாம்தர தமிழ் முஸ்லிம் அதிபர்களுக்கானநேர்முக தெரிவு மீண்டும் அடுத்த மாதம் ஆறாந் திகதி நடைபெறும்.

குறிப்பிட்ட தினங்களில் இடம் பெற்ற தெரிவில் 12 பேர் சமுகம் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

...சைனா செய்தி நிறுவனம் வெளியிட்டு இருக்கிறது.

அமெரிக்கா பால்டிக் குடியரசுகளான லித்வேனியா, எஸ்தோனியா, லட்வியா போன்ற நாடுகளின் தன்னாட்சிக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் சோவியத் யூனியனின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும் நியூசைனா செய்தி நிறுவனம் குற்றம் சாட்டி இருக்கிறது.

...கொன்றதோடு, இன்னொருவரைப் படுகாயங்களுக்கு உள்ளாக்கியுள்ளார். கொலையாளியை வலைவிரித்துதேடும் பொலிஸார், கொலைக் காரணம் பற்றித் தாம் சந்தேகப்படுவதாக நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இச் சம்பவங்களுக்கு தீவிரவாத வலதுசாரி தேசிய முன்னணியைச் சமயக்குரவர்களும் அரசியல் தலைவர்களும் கண்டித்துள்ளனர். ஜேர்மனியில் நாசிகளின் நச்சுவாயுக் கூடங்களின் வரலாற்று முக்கி...

...அமைக்கப்பட இருப்பதாக நகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சைக்கிள் திருட்டை தடுப்பதற்கும், போக்கு வரத்திற்கான வசதிகளை செய்து கொடுப்பதற்கும், இந்தநிலையம் அமைக்கப்பட இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா நகரசபை நிர்வாகமே இந்நிலையத்தை பொறுப்பேற்று நடாத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(தி)

---

## [] யாழ். நகர, யாழ். தெற்குக் கொத்தணி

# பரீட்சை வினாத்தாள்களில் குழறுபடி

# காரணஸ்தர் யார்?

கல்வி என்பது ஒரு இலாபகரமான வியாபாரமாகிவிட்ட காலம் இது. நாளைய சந்ததியினருடைய சிந்தனையைத் திசை திருப்பும் ஆசிரியர்களை பற்றி மேடைகளில் நையாண்டியாகப் பொறுப்புள்ளவர்கள் பேசுமளவிற்கு இன்றைய நிலைமை உள்ளது. வாஸ்தவத்தில் இதற்கு முத்தாய்ப்பு வைத்தது போல் யாழ நகரக் கொத்தணியினதும் யாழ். தெற்குக் கொத்தணியினதும் 1990 ஆம் ஆண்டு முதலாம் தவணைச்சோதனை வினாத்தாள்கள் அமைந்துள்ளன.

சவால்கள், நெருக்கடிகள், போராட்டங்கள் ஊடாக நாம் சென்று கொண்டிருந்த காலம் போய் சுமுகமான சூழ்நிலையில் நடந்த முதல் தவணைப் பரீட்சை இது. ஒரு சோதனையின் சிறப்பியல்புகளான நம்பகத்தன்மை, தகுதி, பயன்பாடு ஆகியவற்றைப் பற்றி கவலை ஏதும் இன்றி கல்வி அளவீட்டில் சோதனையின் முக்கியத்துவத்தை எண்ணிப் பாராமல் 1990 ஆண்டு முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்களை யாழ். தெற்கு யாழ் நகரக் கொத்தணியினர் தயாரித்துள்ளனர் மேம்போக்காக பரீட்சைக்குப் பொறுப்பாயிருந்தவர்கள் வினாத்தாள்களை அச்சுவாகனம் ஏற்றியுள்ளார்கள். முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு வினாத்தாள்களில் குளறுபடிகள், வட மாகாண ஆசிரியர் சங்கம், தொண்டமானாறு வெளிக்கள நிறுவனம் தன்னிச்சையாகப்பள்ளிக் கூடங்கள் சோதனைகளை நடாத்தியுள்ளன. அப் பரீட்சைகள் அனுபவத்தின் உண்மையானவெளியீடுகள் ஆனால் யாழ்நகரக் கொத்தணி யாழ் தெற்குக் கொத்தணியினரின் சோதனை வினாத்தாள்களை பார்த்தால் அவை சோதனையின் தன்மையிலிருந்து விலகியதாகக் காணப்படுகின்றதே!

சோதனை அர்ப்பணிப்புடனும் கரிசனையுடனும் நடாத்தப்படும் ஒரு பொறுப்பு வாய்ந்தகடமையாகும். 2ஆம் தவணைப்பரீட்சை ஜூலை மாத இறுதியில் ஆரம்பிக்கவுள்ளது: ஆகவே இதே தவறுகள் எதிர்வரும் பரீட்சையிலும் நிகழாமல் வினாத்தாள்கள் பற்றிய தரிசனத்தைச் சம்பந்தப் பட்டவர்கள் முன் வைப்பது எமது கடமையாகும்.

### ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

கலைத்திட்டத்தில் விஞ்ஞானம் ஒரு முக்கியமான பாடம் பத்தாம் ஆண்டு விஞ்ஞான விடைத்தாள்களை எடுத்துக் கொள்வோம். அது மாணவர்களைத் திக்கு முக்காட வைக்கிறது.

பகுதி 1 பகுதி 11 என்று வினாத்தாள் பிரிக்கப்பட்டுள்ளது. பலவுள் தெரிவு, குறு விடை ஆகிய சோதனை முறைகளும் வினாத்தாளில் கையாளப்பட்டுள்ளன. பதிலெழுத முப்பது நிமிடங்கள் தான் தரப்படுகின்றன. ஆனால் நம்பகரமான பரீட்சையில் 10 ஆம் ஆண்டு வினாத்தாள்களுக்கு விடையெழுதவழங்கப்படவேண்டிய நேரம்2அல்லது 2 1/2 மணித்தியாலங்கள்.

ஆண்டு 10 வினாத்தாளின் பொய்க் கோலத்தைக் களைந்து வினாத்தாளின் அடிவேரைக் காணலாம்.

பகுதி. 1.

வினா 1 இல் அடர்த்தியின் அலகு 2700 kg.m −3 என்பதற்குப் பதிலாக 2700 kg.m-3 என அச்சிடப்பட்டுள்ளது.

வினா 6 இல் ஐதரசன் அணுத்திணிவு H-1 என்பதற்குப் பதிலாக வேறு ஏதோ ஒன்று காணப்படுகிறது.

வினா 12 இல் $Ca(OH)_2$ $CuSo_4$ என்பவை பிழையாகக் காணப்படுகின்றன.

வினா 13 இல் எக்கலத்தில் என்பதற்கு பதிலாக எக்காலத்தில் எனக் காணப்படுகிறது.

வினா 14 இல் பச்சை நிற இலைகள் என்பதற்குப் பதிலாக பச்சை நிறக் கிளைகள் எனக் காணப்படுகிறது.

வினா 15 இல் Mg என்பதற்குப் பதிலாக M எனக் காணப்படுகிறது.

வினா 19 இல் குறியீடுகள் பிழையாகக் காணப்படுகின்றன.

வினா 20 இல் 12V என்பதற்குப் பதிலாக 12X எனக் காணப்படுகிறது.

பகுதி. 2.

விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக... இல்லை.

வினா 2 இல் 4ம், 5ம், 6ம், கேள்விகள் அச்சிடப்படவில்லை.

வினா 3 எது எனத் தெரியவில்லை.

வினா 3 இல் 3ம், 4ம், 5ம், 6ம், கேள்விகள் அச்சிடப்படவில்லை.



யாழ் நகரக் கொத்தணி-1990
முதலாம் தவணைப் பரீட்சை
விஞ்ஞானம்

யாழ் தெற்குக் கொத்தணி-19
முதலாம் தவணைப் பரீட்
தமிழ்மொழி

யாழ் நகரத் தெற்குக் கொத்தணி-1990
முதலாம் தவணைப் பரீட்சை

யாழ் தெற்குக் கொத்தணி-199
முதலாம் தவணைப் பரீட்சை
கணிதம்
ஆண்டு 5 நேரம் 2 மணி

வினா 4, வினா 5 என அச்சிடப்படவில்லை.

வினா 5 இல் 5-ம், 6-ம், கேள்விகள் அச்சிடப்படவில்லை.

படத்தில் xyz எழுத்துக்கள் தெளிவாகவில்லை.

வினா 6 இல் முழுக்கேள்வியும் அச்சிடப்படவில்லை.

6 கேள்விகள் தரப்பட்டிருக்கலாம்.

கேள்விகளைக் காணவில்லை.

யாழ். நகரக் கொத்தணியும், யாழ். தெற்குக் கொத்தணியும் நடாத்திய முதலாம் தவணைப் பரீட்சை (1990) மனநிறைவு தருவதாக இல்லை. பரீட்சை வினாக்களில் குழறுபடிகள். இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் சிறார்கள். ஆர்வமில்லாமல், குறிக்கோளற்ற முறையில் சோதனைகளை இப்படி நடாத்துவதால் ஏற்படும் சமுதாய இழப்பை இன்னும் ஒருவரும் உணரவில்லை. இந்நிலைமையைச் சீர்திருத்துவதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற இன்றியமையாமையே இக்கட்டுரை.

### யாழ். தெற்குக் கொத்தணியும் வினாத்தாள்களும்

யாழ் தெற்குக் கொத்தணியும், யாழ் நகரக் கொத்தணியும் ஒரே கூடை செங்கற்கள். இரண்டு கொத்தணிகளுக்கும் ஒரே கோட்டில் தான் வித்தியாசம். வினாத்தாள்களில் தலைப்பை மாற்றி யாழ் நகரக் கொத்தணி என்றிருப்பதை யாழ் தெற்குக் கொத்தணி என்று மாற்றி 'விளையாடி' யுள்ளார்கள். அச்சகச் செலவு குறையலாம்

**ஈ. ஆர். திருச்செல்வம்**

என்ற பொருளாதாரப் பொது விதி கருதி இணைந்தார்களோ என்னவோ? ஒரு ஆசிரியர் வெற்றிகரமான வியாபாரியாய் இருக்க முடியுமா? வியாபார நோக்கில் தயாரிக்கப்பட்ட இந்த வினாத்தாள்களைப் பார்த்தால் அநேகர் எதிர்மறையிலேயே உடனடியாகப் பதிலளிப்பர்.

### ஆங்கில பாடம் - ஆண்டு 11

ஆங்கிலத்தைப் பற்றிச் சகல மட்டங்களிலும் மிகக் கரிசனையுடன் பேசப் படும் காலமிது. அரசியல் வாதிகள் கல்விமான்கள் போலவும், கல்விமான்கள் அரசியல் வாதிகள் போலவும் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பேசித்திரிகிறார்கள். எது எப்படியாயினும், மாறிவரும் உலகின் சாரத்தைப் ஸ்பரிசிப்பதற்கும், அனுபவங்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஆங்கிலம் அவசியம். இப் பகைப் புலத்தில், யாழ் தெற்குக் கொத்தணியில் 1990 முதலாம் தவணைப் பரீட்சை 11 ஆம் ஆண்டு ஆங்கில வினாத்தாள் பற்றி ஒரு கண்ணோட்டம்.

வினாத்தாள்கள் சிக்கனம் கருதியோ என்னவோ பதிப்பிக்கப்படவில்லை. றோணியோ செய்யப்பட்டுள்ளது. ஆனால் வழமைப் பிரகாரம் குறு விடைச் சோதனை, நிரப்புதல் சோதனை இணைத்துப் பொருந்தும் சோதனை, சரி பிழைச் சோதனை போன்ற சோதனை முறைகள் கையாளப்பட்டுள்ளன. மேலெழுந்த வாரியாகப்பார்த்தால் உயர் நம்பகத் தன்மையை இச் சோதனை (ஆங்கில வினாத்தாள்) காட்டுகிறது.

ஆண்டு 11 ஆங்கில வினாத்தாளில் மொத்தம் 24 பிழைகள் காணப்படுகின்றன. ஆகவே, இங்கு தரப்பட்ட எல்லாக் கேள்விகளுக்கும் மாணவர் பதிலளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது அபத்தமானது. இவ் வினாத்தாளில் ஆங்கில அகராதியில் காணமுடியாத, ஆங்கிலத்துடன் தொடர்பில்லாத பல சொற்கள் காணப்படுகின்றன.

(5 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் இன்பக்கனிகள் நூல் வெளியீட்டு விழா

(வவுனியா)

குழந்தைகளை பண்புள்ளவர்களாக்குவதற்கும், சுதந்திர வேட்கையுடையவர்களாக்குவதற்கும், இக் கவிஞரின கவிதைகள் உதவுகின்றன. நூலாசிரியர் குழந்தைகளின் உள்ளங்களை நன்கு உணர்ந்தவராக இருக்கின்றார்.

வவுனியா மகளிர் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற 'இன்பக்கனிகள்' குழந்தைக் கவிதை நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசும் போது, செட்டிகுளம் மகாவித்தியாலய கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா கல்வி அதிகாரி கவிஞர் அருளானந்தம் படைத்து வெளியிட்ட இந் நூல் வெளியீட்டு விழாவின் போது, திரு. பேரம்பலம் மேலும் தெரிவித்ததாவது,

கவிஞர் எம்மத்தியில் தினமும் காணும் நிகழ்வுகளைக் கருப்பொருளாக அமைத்து கவிதை படைத்துள்ளார். இவரது இலக்கியத் திறமை பாராட்டப்பட வேண்டியது என்றார்.

வவுனியா கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். நவரட்ணராஜா பேசும் போது, இக் கவிஞர் வன்னி மாவட்டத்தில் பல கலைஞர்களையும், கவிஞர்களையும் உருவாக்கியுள்ளார். இவருக்கு எதிர்காலமுண்டு. இவர் தனது காலத்தில், வன்னிப் பிரதேசத்தில் பல கவிஞர்களையும் கலைஞர்களையும் உருவாக்க வேண்டும் என்ற பொறுப்பை கவிஞருக்கு வழங்குகிறேன் என்றார்.

ஆசிரியர் குணபாலசிங்கம் தமதுரையின் போது, அன்பினால் தான் நாம் சகல துறைகளிலும் ஜெயிக்கலாம் என்பதை இந்த நூலாசிரியரின் கவிதைகளில் காணக் கூடியதாக உள்ளது.

அன்புதான் பெரும் தெய்வம் என்பதை கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ், சுகாதாரம், அறிவியலோடு சமயத்தையும் இணைத்து கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. இது கவிஞரின் திறமையைப் புலப்படுத்துகிறது என்றார்.

இவ்விழாவில் பலர் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்தினார்கள். பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (தி)

# நகர்ப்புற ஆசிரியர்களை கிராமங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டும்

(வவுனியா)

நீண்டகாலமாக நகரப் பகுதிப் பாடசாலைகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் கிராமப்பாடசாலைகளுக்கும், கிராமப் பகுதி பாடசாலைகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் நகரப் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட வேண்டும். தொடர்ந்து ஆசிரியர்கள் குறிப்பிட்ட பாடசாலைகளில் சேவையாற்றி வருவது நிறுத்தப் பட வேண்டும்.

கடந்த புதன்கிழமை (23.05.90) வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடை பெற்ற உயர் வகுப்புப் பாடசாலை அதிபர்களின் சந்திப்பின் போது செட்டிகுளம் கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு.பேரம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சந்திப்பு நிகழ்ச்சியின் போது பாடசாலைகளின் குறைபாடுகள் பற்றி ஆராயப்பட்டது.

வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள்முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷ். இக் கலந்துரையாடலுக்குச் சமுகம் தந்திருந்தார்.

அதிபர்கள் பலர் தத்தமது பாடசாலைகளில் நிலவும் பற்றாக் குறைகள் பற்றியும் கஷ்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.

வவுனியா மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. நவரட்ணராஜாபேசும் போது, கல்வி விஷயத்தில் எழும் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்க முடியாது. நாம் இருக்கின்ற வளத்தை கூடிய அளவிற்குப் பயன் படுத்த வேண்டும். மேலதிக வளத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

வவுனியா மாவட்டத்தில் பல புதிய பாடசாலைகளை உருவாக்குவதற்கும், தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் சமனாக இல்லை என்று அறிந்துள்ளேன். கொத்தணி ஆசிரியர்களின் சிபார்சின் பேரில் சில மாற்றங்களைச் செய்யவுள்ளேன். என்றார்.

வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் பேசும் போது,

ஆசிரியர்கள் திங்கட்கிழமை வெள்ளிக் கிழமைகளில் பாடசாலைகளுக்கு செல்லாமல் விடுவது தவிர்க்கப்பட வேண்டும். (அதிகாரிகள் இதில்கூடிய கவனமெடுக்கவேண்டும்.

கல்விவளர்ச்சியில் எமது பிரதேசம் முன்னேற வேண்டும். தவறு இருக்கும் நிர்வாகத்தில் தான் நாம் தலையிடுகிறோம் என்றார். (தி)

# இணக்க சபைகள் இயங்க மக்கள் ஒத்துழைப்புதேவை

(வவுனியா)

அகிம்சை வழியிலும், பேச்சுவார்த்தையிலும் நாம் நம்பிக்கை கொண்டவர்கள் ஆனால், ஸ்ரீலங்கா அரசின் தற்போதைய அணுகு முறையில் எமக்கு நம்பிக்கை குறைந்துள்ளது.

தாண்டிக்குளம் பாடசாலையில் நடைபெற்ற இணக்க சபையின், புதிய உறுப்பினர் தெரிவுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது, வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. என். தினேஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போது,:-

நாம் யுத்தத்திற்கு ஆசைப் படவில்லை. யுத்தத்தைவிரும்பவு மில்லை. ஆனால், அரசின் அண்மைக் காலப் போக்கு, ஒரு யுத்தத்திற்கான முயற்சியென்பதை மக்களுக்கு வெளிப் படுத்துகிறது. இதனால் தான் மக்கள் பலர் எம்மிடம் வந்து, சந்தேசும் கேட்கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசு, மக்களின் அங்கீகாரத்தைப் பெறாத அமைப்புடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது. தகுதியில்லாத குழுவுடன் பேசுவதனால், பிரச்சினை தீராது. மக்கள் வீண் சந்தேகம் கொள்ளாமல் பிரச்சினையை எதிர் கொள்ளத் தயாராக வேண்டும்.

எமது போராளிகள் திடகாத்திரமானவர்கள். வலுவுள்ளவர்கள். உழைக்கக் கூடியவர்கள். இவர்கள் உயிரை விட, உரிமைகளையே நேசிக்கிறார்கள்.

தற்போதைய அமைதியை நிரந்தரமாக்குவது மக்களின் உறுதியிலும், ஒற்றுமையிலுமே தங்கியுள்ளது.

மக்களின் மத்தியில் எழும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கும், ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொள்வதற்கும், கட்டுக்கோப்பானகிராமங்களைக் கட்டியமைப்பதற்குமே இணக்க சபைகள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றை சிறந்த முறையில் இயக்குவதற்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை என்று குறிப்பிட்டார். (தி)

# இந்து சமயபோட்டியும் பரிசளிப்பு விழாவும்

(பருத்தித்துறை)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய இந்துசமயப் போட்டிகளில் இறுதிப் போட்டிகள் இன்றும் பரிசளிப்பு விழா நாளையும் நடைபெறுமென இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விழாவிற்கு இந்துசமய இந்து கலாசார தமிழ்மொழி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு. பி.பி. தேவராஜ் தலைமை தாங்குவார். கிராமிய கைத்தொழில் அபிவிருத்திஉல்லாசப்பயணத்துறை அமைச்சர் திரு.எஸ் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். இப்பரி


## மன்னார் மாவட்ட கூட்டுறவுச்சபை

### பதவிவெற்றிடம் - கல்வி உத்தியோகத்தர்

மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் கல்வி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

சம்பளம்:- 114.8 = 1005 — 40 × 5 — 50 × 10 — 1705

(அத்துடன் கூ. பணிப்பாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.)

தகைமைகள்:

(அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்டத்தில் அங்கத்துவ தொடர்பு சம்பந்தமான வேலையில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது 10 ஆம் சம்பளத்திட்டத்தில் அங்கத்துவ தொடர்பு சம்பந்தமான வேலையில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அல்லது அதற்கிணையான பட்டம் பெற்றவர்.

(இ) கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம் சித்தி அல்லது க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் செயலாளர் தொடர்பான பணிகளில் 4 வருட அனுபவம்.

வயது 20 தொடக்கம் 40 வரை

விண்ணப்ப முடிவுத் திகதி 15-6-90



UNIVERSITY OF JAFFNA
TENDER NOTICE

Tenders are invited for CONSTRUCION OF IRON GRILL FENCING AT HORTICULTURE GARDEN (BALANCE WORK) from contractors registered with University of Jaffna for Civil Engineering Works.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 30,5.1990 1 6 1990 on producing a receipt, from Bursar, University of Jaffna for the following.

Non refundable tender fee— Rs. 250/—

Refundable tender fee—



## பகிரங்க ஏலவிற்பனை

எமது சங்கத்துக்குச் சொந்தமான 26/299 இலக்க ''டாட்டா பென்ஸ்'' அடிச்சட்டம் கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கத் தலைமையலுவலகத்தில் வைத்து 14.06 90 ஆம் திகதி காலை 9.00 மணியளவில்பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. கூடுதலான கேள்விக்காரருக்கே முன்னுரிமை அளிக்கப்படும். கேள்வித் தொகையின் அரைப் (1/2 பங்கு) பங்கை உடன் செலுத்துவதுடன் மிகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி குறித்த வாகனத்தை சங்க எல்லைப் பரப்புக்குள் இருந்து அப்புறப்படுத்துதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.

கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

(B-1022)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி அன்னம்மா நடராசா
(இளைப்பாறிய ஆசிரியை)

மலர்வு 30 - 01 - 1933
உதிர்வு 28 - 01 - 1990

அன்பின் திருவுருவாய் பண்பின்
பிறப்பிடமாய் பாசத்தின் சிகரமாய்
சுயமரியாதைக் கொள்கையின்
சுடர் விளக்காய் வாழ்ந்து எங்கள்
அனைவருக்கும் வழிகாட்டியாய்
குடும்பத்தை வழிநடத்தி அரும்
பணியாற்றிய எங்கள் அன்புத்
தெய்வமே நீ திடீரென பிரிந்து
எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட
உன் நினைவும் பாசமும் எம்மை
விட்டு அகலாது நிலைத்திருக்கும்

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகவும்

தகைமைகள்:

(அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்டத்தில் அங்கத்துவ தொடர்பு சம்பந்தமான வேலையில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது 10 ஆம் சம்பளத்திட்டத்தில் அங்கத்துவ தொடர்பு சம்பந்தமான வேலையில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரி அல்லது அதற்கிணையான பட்டம் பெற்றவர்.

(இ) கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரம் சித்தி அல்லது க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் செயலாளர் தொடர்பான பணிகளில் 4 வருட அனுபவம்.

**வயது 20 தொடக்கம் 40 வரை**

**விண்ணப்ப முடிவுத் திகதி 15-6-90**

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

செயலாளர்
மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சபை
2 ஆம் குறுக்குத் தெரு
பெற்றா
மன்னார்.

(மன்னார் மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.)

(R 1073)

## TENDER NOTICE

Tenders are invited for CONSTRUCION OF IRON GRILL FENCING AT HORTICULTURE GARDEN (BALANCE WORK) from contractors registered with University of Jaffna for Civil Engineering Works.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 30,5.1990 1 6 1990 on producing a receipt, from Bursar, University of Jaffna for the following.

Non refundable tender fee- Rs. 250/-

Refundable tender fee- Rs. 1000/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna on or before 12. 06. 1990 at 10 00 a m

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

Registrar,
University of Jaffna,
Thirunlevely, Jaffna.

(B1015)

கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசு, மக்களின் களின் ஒத்துழைப்புத் தேவை என்று குறிப்பிட்டார். (தி)

# இந்து சமயபோட்டியும் பரிசளிப்பு விழாவும்

(பருத்தித்துறை)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய இந்துசமயப் போட்டிகளில் இறுதிப் போட்டிகள் இன்றும் பரிசளிப்பு விழா நாளையும் நடைபெறுமென இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இறுதிப் போட்டிகள் கொட்டாஞ் சேனை விவேகானந்தா மகா வித்தியாலயத்திலும், பரிசளிப்பு விழா புதிய கதிரேசன் மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. பரிசளிப்பு விழாவிற்கு இந்துசமய இந்து கலாசார தமிழ்மொழி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு. பி .பி. தேவராஜ் தலைமை தாங்குவார். கிராமிய கைத்தொழில் அபிவிருத்திஉல்லாசப்பயணத்துறை அமைச்சர் திரு.எஸ் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். இப்பரிசளிப்பு விழாவின் போது தேசியமட்டத்தில் 27 மாணவ மாணவிகளுக்கும் மாவட்ட மட்டத்தில் 153 மாணவ, மாணவிகளுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இப்போட்டிகளில் பங்குபற்றிச்சித்தியெய்திய ஏனைய மாணவமாணவியர்களுக்குஇந்துசமயகலாசாரஅலுவல்கள் திணைக்களம்சான்றிதழ்களை அனுப்பிவைக்கும். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய முதலாவது இந்துசமயப் போட்டிகள் இதுவாகும். (15)

## ஆலய உற்சவம்

(சுழிபுரம்)

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்ரமணியர் தேவஸ்தான வைகாசி மகோற்சவம் இன்று 28 ஆந் திகதி திங்கள் கிழமை முதல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. ஜூன் மாதம் 7 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும். (17)

(இளைப்பாறிய ஆசிரியை)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 30 - 01 - 1933 | 28 - 01 - 1990 |

அன்பின் திருவுருவாய் பண்பின்
பிறப்பிடமாய் பாசத்தின் சிகரமாய்
சுயமரியாதைக் கொள்கையின்
சுடர் விளக்காய் வாழ்ந்து எங்கள்
அனைவருக்கும் வழிகாட்டியாய்
குடும்பத்தை வழிநடத்தி அரும்
பணியாற்றிய எங்கள் அன்புத்
தெய்வமே நீ திடீரென பிரிந்து
எம்மை ஆளாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்ட
உன் நினைவும் பாசமும் எம்மை
விட்டு அகலாது நிலைத்திருக்கும்

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகவும் கடிதமூலமாகவும் தமது அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கணவன் : K. நடராசா
(அன்பு ஸ்ரோஸ் கல்முனை)

மகன்: N. கிரிதரன்
(யாழ். பல்கலைக்கழக வர்த்தக பீடம்) (B/1029)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருஷம் வைகாசித் திங்கள் 14ஆம் நாள் (28-05-1990) திங்கட்கிழமை காலை 9 16 மணிமுதல் 10. 10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எமது புதல்வன் திருநிறைச் செல்வன் | எமது புதல்வி திருநிறைச் செல்வி |
| --- | --- |
| **யூகராஜா** | **சாந்தினி** |
| (Director, Segar & Bros (Pte)Ltd, (Colombo) | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திவ்விய ஜீவன சங்க மண்டபத்கில் (சட்டநாதர் கோவிலடி, நல்லூர்) திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

மணவாளக்கோலம் காலை 5. 52 முதல் 6. 52 வரை

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
| --- | --- |
| திரு. வீ. வேலுப்பிள்ளையும் பாரியாரும் | திரு. க. பஞ்சலிங்கமும் பாரியாரும் |
| "சத்தி அகம்," புளியங்கூடல், ஊர்காவற்றுறை. | சங்கரத்தை, வட்டுக்கோட்டை. |

(B/1020)

# 1ஆம் வருட நினைவஞ்சலி



## செல்லத்துரை கிறிஸ்தோபர் (காணிக்கை)

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 22-3-1953 | 28-5-1989 |

துயருறுவோர்- அன்பு மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர்
சகோதரர்கள், சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (R/ 310)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10 - 10 - 1928

உதிர்வு
28 - 04 - 1989

திதி
28 - 05 - 1990



## மணி றெயிலர்

எம் குடும்ப ஒளி விளக்கே
உன் ஒளி அணைந்ததும்
எம் இதயத்தில் இருந்த
ஒளி அணைந்தது - நீ
அணைந்து ஓராண்டு அகன்றாலும்
எம் நினைவை விட்டு அகலவில்லை

உம் பிரிவால் வாடும்

குடும்பத்தினர்.

சிவன்கோவிலடி,
வல்வெட்டித்துறை. (B/1023)

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசும் முஸ்லிம் மக்களும்

(3)

கொழும்புவாழ் முஸ்லிம் தலைமைகள் முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணாத காரணத்தினால் ஒரு சக்தியாக உருவெடுத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் இன்றைய நடவடிக்கைகள் முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணுவதாக அமையவில்லை. தமிழ்-முஸ்லிம் மக்கள் இணைந்து தமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய இன்றைய காலகட்டத்தில் தனது தலைமையினைக் காப்பாற்றுவதற்காக ஏகாதிபத்தியங்கள் கைக்கொள்ளும் பிரித்தாளும் தந்திரத்தை முஸ்லிம் காங்கிரசும் பின் பற்றுகின்றதா எனும் சந்தேகத்தினை முஸ்லிம் காங்கிரசின் இன்றைய நடவடிக்கைகள் ஏற்படுத்துகின்றன.

தமிழ் முஸ்லிம் மக்கள் ஒரு அமைப்பின் கீழ் ஐக்கியப்பட்டால் தங்கள் தலைமைக்கு ஆபத்து என்பதனை உணர்ந்து கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் முஸ்லிம்களுக்குத் தனி மாகாணம் அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தனிமாகாணம் முஸ்லிம்களுக்கு சாதகமானதா?

முஸ்லிம்களுக்கெனத் தனி மாகாணம் அமைக்கப்படுவது முஸ்லிம் மக்களை சிங்கள இனவாதம் இலகுவாக ஒடுக்குவதற்கே வழிவகுக்கும் என்பதனைக் கடந்த காலம் எமக்குக் காட்டுகின்றது. 1963ஆம் ஆண்டு அம்பாறை தனி மாவட்டமாக்கப்பட்டபோது அம் மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். இம்மாவட்டத்தின் நிர்வாகம் முஸ்லிம் மக்களின் கைகளில் இருக்குமென்றே அவர்களால் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் 1963ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 46.3 வீதமாக இருந்த முஸ்லிம் மக்களின் குடித்தொகை வீதமானது 1981ஆம் ஆண்டு குடிசனமதிப்பீட்டின் போது 41.6 வீதமாகக் குறைவடைந்து விட்டது. இதே சமயம் 29.6 வீதமாக இருந்த சிங்களவர்களின் குடித்தொகை வீதமானது 37.7 வீதமாக உயர்வடைந்துள்ளது சிங்களக் குடியேற்றங்கள் மூலம் முஸ்லிம் மக்களை அவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த இடத்தில் அவர்களையே சிறுபான்மையினராக்கும் முயற்சி அம்பாறை தனிமாவட்டம் ஆக்கப்பட்ட பின்னரே இடம் பெற்றது. 1991ஆம் ஆண்டு குடிசன மதிப்பீடு எடுக்கப்படும் போது அம்பாறை மாவட்டம் சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட மாவட்டமாகவே இருக்கும்.

அம்பாறை மாவட்டம் திடுகாமல்ல எனப்பெயர்மாற்றம் செய்யப்பட்டதோடு மாவட்ட நிர்வாகமும் சிங்களவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. மாவட்டரீதியாக வழங்கப்படும் அரச வீடமைப்புத் திட்டங்கள், மாதிரிக் கிராமம், கடன் வசதி போன்ற வசதிகளும் பெரும்பாலும் சிங்களவர்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ் - முஸ்லிம் மக்கள் பிரிந்திருந்தால் சிங்கள இனவாதம் எவ்வாறு தனது கொடூரக் கரத்தை விரிக்கும் என்பதனை அம்பாறை மாவட்டம் சிங்களமயப்படுத்தப்பட்டமை தெளிவாக வெளிப்படுத்துகின்றது. முஸ்லிம் மக்களுக்குத் தனிமாகாணம் அமைக்கப்படினும் அம்மாவட்டமும் சிங்கள மயப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. எனவே தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்த தமிழர் தாயகத்தை அமைத்துக் கொள்வதே தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தும்.

## முஸ்லிம் காங்கிரசின் துரோகம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்காதது மட்டுமன்றி முஸ்லிம் மக்களுக்குத் துரோகமிழைத்துள்ளது என்பதனைப் பின்வரும் விடயங்கள் வெளிக்கொணர்கின்றன.

1) முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றி எதுவித கவலையுமின்றி உருவாக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைகளின் தேர்தல்களில் இந்திய இராணுவத்தினதும் இந்தியக் கூலியினதும் முஸ்லிம் மக்களிற்கு எதிரான வன்முறைகளின் மத்தியிலும் பங்கேற்றுக் கொண்டமை.

2) முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த இந்தியக்கூலி அமைப்புக்களுடன் இணைந்து முஸ்லிம் இளைஞர்களை இந்திய இராணுவத்திடம் இராணுவப் பயிற்சிக்கு அனுப்பி வைத்தமை.

3) கட்டாய இராணுவப் பயிற்சியில் இருந்து தப்பி ஓடிய முஸ்லிம் இளைஞர்கள் கொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்டபோது உரிய நடவடிக்கைகள் எடுக்காது விட்டமை.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிந்தனைக்கு

அடிமைத்தனத்தை அறுக்கும் ஆற்றல் அடிமை ஒவ்வொருவன் கையிலேயே உள்ளது.

- வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 28 - 05 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண். 05

## அநுராவின் நிபந்தனைகள் - 1

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரமுகரும் பதில் எதிர்க்கட்சித் தலைவரும் உலகில் முதல் பெண் பிரதமர் என்று பெயர் பெற்றவரான திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் புதல்வருமான அநுரா பண்டாரநாயக்கா மூன்று நிபந்தனைகளை விடுதலைப் புலிகளுக்கு விதித்திருக்கிறார்.

நிபந்தனைகள் விதிப்பது இலங்கை அரசியலீல் ஒன்றும் புதுமையல்ல.

தமிழ் மக்களின் கோரிக்கைகளைத் தட்டிக் கழிப்பதற்கும் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கும் விஷயங்களிலும் சிங்கள அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் போட்டி போட்டு அவற்றை மறுப்பதில் கங்கணம் கட்டி நிற்பதும் இலங்கையில் புதிய விஷயமல்ல; புதினமுமல்ல.

1955 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் வந்த அன்றைய பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல தமிழுக்குச் சம அந்தஸ்து தருவதாகக் கூறினார்.

சேர் ஜோண் கொழும்பு திரும்பு முன்னரே அநுராவின்தகப்பன் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா ''நான் ஆட்சிக்கு வந்ததும் இருபத்திநான்கு மணி நேரத்தில் சிங்களத்தை உத்தியோக மொழியாக்குவேன்'' என்று சூளுரைத்தார்.

கொழும்பு திரும்பிய சேர் ஜோண் சம அந்தஸ்தை காற்றில் பறக்கவிட்டு யு.என் பி. சகாக்களோடு சேர்ந்து ''சிங்களம் மாத்திரமே'' உத்தியோக மொழி எனக் குரல் கொடுத்தார்.

பண்டாரநாயக்கா கூட்டுக்கட்சி சிங்களம் உத்தியோக மொழி தமிழுக்கு நியாயமான அளவு உபயோகம் என்றபோது தமிழுக்கு இடமேயில்லை சிங்களம் மாத்திரமே உறுதிமொழி என்று கூறியது யு. என். பி.

1957 ஆம் ஆண்டில் பண்டா – செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானதை எதிர்த்து ஜே. ஆர். தலைமையில் யு.என் பி. கண்டி யாத்திரை சென்று கலகத்தைக் கிளப்பி ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதப் பொதுத்தேர்தலிலும் ஜூலை மாதப் பொதுத் தேர்தலீல் சிறிமா அம்மையார் அரசியலுக்கு வந்தபோதும் தமிழருக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்க முயற்சி செய்வதாக டட்லியின் யு. என். பி. யும் சிறிமாவின் சுதந்திரக் கட்சியும் போட்டி போட்டுக் குற்றஞ் சாட்டிப் பிரசாரம் செய்து தமிழருக்கு உரிமை கொடுக்க முடியாது என்பதில் உறுதியாய் நின்றனர்.

1961 இல் தமிழரசுக்கட்சி வடக்கு கிழக்கில் சத்தியாக்கிரகம் செய்து அரசாங்க இயந்திரம் ஸ்தம்பிக்கச் செய்திருந்த சமயத்தில் அரச படைகளை நிராயுதபாணிகள்மீது ஏவிவிட்டு அடக்கினார் சிறிமா.

1958 ஆம் ஆண்டில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா

## குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

இடம் தெரிவு செய்யப்பட்டவுடன், எமக்குத் தேவையான பிரதேசத்திலும் சற்று கூடுதலான பகுதியில் இருந்து, மேற்படை மண்ணை புற்கள், இலைகளுடன் சேர்த்து அப்படியே தட்டுத்தட்டாக பெயர்த்து எடுக்க வேண்டும். சிறுசெடிகள், புற்கள் பசுமையாக அதில்இருக்குமாயின், அதன் மேல் நீர் தெளிக்கப்பட்டு நிழலுள்ள பிரதேசத்தில்வைக்கப்படவேண்டும். பின்புஇவ்விடத்தில் ஏழரை அடி அகலத்துக்கு 1 அடி ஆழமுள்ள கிடங்கொன்று வெட்டப்பட வேண்டும். பின் அதனுள் நடுவே ஆறரை அடி அகலத்தில் ஒன்றரை அடி ஆழமாக்கப்படல் வேண்டும். பின் மீண்டும் உள்ளே ஐந்தரை அடிஅகலத்தில் 2 அடி ஆழத்திற்கு வெட்டப்பட வேண்டும். இதுவரை வெட்டப்பட்டிருக்கும் பகுதியே கூரை அமைப்பதற்காக பயன்படப் போகும் பகுதியாகும். இனி தங்கியிருக்கும் பகுதிக்கான கிடங்கானது உள்ளே முன்னர் குறிப்பிட்டவாறு மேல் பகுதி நாலரை அடி அகலமானதாகவும் அடிப்பகுதி 3 1/2 அடி அகலமானதாகவுமிருக்கும்வண்ணம்6அடிஆழத்திற்குவெட்டப்பட வேண்டும்

மண் அகழும் வேலை நடக்கும்போது மண் கண்ட.படி சிதறா வண்ணம் ஓர் இடத்தில் சேமிக்கப்பட வேண்டும். இப்போது தங்குவதற்குப் பயன்படும் அடிப்பகுதியானது தேவையாயின் ஓரங்களில் பலகைகளோ, கட்டைகளோ இறுக்கப்பட்டு பலப்படுத்தப் படலாம். அதன் பின்மேலே ஐந்தரைஅடிஅகலத்தில்உள்ளகிடங்கின்2 அடிஉயரமான பகுதி முழுவதையும் 6-8 அங்குல விட்டமுடைய மரக்குற்றிகளை ஒன்றன் மேல்ஒன்றாக மூன்று அடுக்குகளுக்கு குறையாமல் படத்தில் காட்டியவாறு இட்டு நிரப்ப வேண்டும். இதற்கு உங்கள் பகுதியில் கிடைக்கும் வைரமான மரங்களை தெரிவுசெய்து, அவை கறையான் அரிப்பிற்கு ஊடாகாமல் தடுப்பதற்காக சொலிக்னம் (Solignum)இடப்பட வேண்டும். அது கிடைக்காவிடின் கழிவுஎண்ணெய், தார் முதலியவை கூடப்பூசலாம். இப்போது மரக்கட்டைகளிலான கூரையின் பகுதி முடிவடைந்ததும் அதன் மேல் நீர், மண் என்பன அகழியினுள் செல்லாது தடுப்பதற்காக பொலித்தின் அல்லது கன்வஸ் போன்றவை இடப்பட வேண்டும். பின்பு அதன்மேல் உள்ள ஒன்றரை அடி உயரமான ஆறரை அடி அகலக் கிடங்கானது முற்று முழுதாக மண் இட்டு நிரப்பப்பட வேண்டும் மீண்டும் அதன் மேல் முன்னர் இட்டதை போன்ற நீர் புகவிடாத தடுப்பு ஒன்றுஇடப்பட்டு அதன் மேல் உள்ள 1 அடி உயரமுடைய ஏழரை அடி அகலக் கிடங்கானது சிறு பாறைகள், கற்கள் முதலியவற்றால்

## பரீட்சை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணங்களைப் பார்ப்போம்.

SPARIUGHY, ESTERN, MASED, FITRE, QUNUES, LEGIOUS – இப்படியான சொற்களை அள்ளித் தெளித்துள்ளார்கள். சொற்கள் என்ன பாஷையோ? இவற்றை விட கேள்விகளில் பல பிழைகள்.

பரீட்சை மண்டபத்தில் கற்றுத் தெரிந்து கொண்ட சாத்தியப்பாடுகளோடு பிழையான கேள்விகளை அணுகும்போது ஞானத்திலும், ஆங்கிலத்திலும்பின் தங்கியநிலையிலுள்ள மாணவர்களும் 50% புள்ளிகளுக்குமேல் எடுத்திருக்க வேண்டும்.

★ 1990 முதலாம் தவணைப் பரீட்சையில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட இடமில்லை. நாட்டு நிலை சுமுகமாக இருந்திருக்கிறது. மாணவர் தவணைமுறையில் செலுத்தும் வசதிக்கட்டணத்தை விடப் பரீட்சைக்கென்று பணம் வேறாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வினாத்தாள்களை ஏனோ

## ஊர்சுற்றி

எழுதுவது

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையில்பல பாகங்களிலுமே பாணுக்கு 'மவுசு' வெகுவாகக் குறைந்து விட்டது.

என் வீட்டுக்குச் சமீபத்தில் சிறிய கடை ஒன்றில் காலை நேரத்தில் பாண் வாங்குவதற்கு சிறுவர் சிறுமியர் முண்டியடித்துக்கொண்டு நிற்பதைப் பார்த்திருக்கிறேன்.

பாண் கொண்டு வருபவர் வருவதற்குச் சற்று நேரமானால் இந்தச் சிறுவர்கள் ஆவலாய்ப் பறந்து திரிவார்கள்.

கடந்த சில தினங்களாக இவர்கள் பாண் வைத்திருக்கும் பக்கமே பார்ப்பதாகக் காணோம்

பாடசாலைக்குத் தான் மதிய உணவுக்குப் பாண், பணிஸ் கொண்டு போகக் கூடாது. வீட்டிலுமா பாண்வெறுத்துவிட்டது.

கடைக்காரரிடமே கேட்டேன். பாண் வியாபாரம் குறைந்து விட்டதா என்றேன்.

''முன்னர்விற்றதைவிட இப்பொழுது தினமும் பத்து, பன்னிரண்டு றாத்தல் (இப்பொழுதும் பேச்சு வழக்கில் றாத்

மாத்திரமே உறுதிமொழி என்று கூறியது யு. என். பி.

1957 ஆம் ஆண்டில் பண்டா – செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானதை எதிர்த்து ஜே. ஆர். தலைமையில் யு.என் பி. கண்டி யாத்திரை சென்று கலகத்தைக் கிளப்பி ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதப் பொதுத்தேர்தலிலும் ஜூலை மாதப் பொதுத் தேர்தலில் சிறிமா அம்மையார் அரசியலுக்கு வந்தபோதும் தமிழருக்கு நாட்டைப் பிரித்துக் கொடுக்க முயற்சி செய்வதாக டட்லியின் யு. என். பி. யும் சிறிமாவின் சுதந்திரக் கட்சியும் போட்டி போட்டுக் குற்றஞ் சாட்டிப் பிரசாரம் செய்து தமிழருக்கு உரிமை கொடுக்க முடியாது என்பதில் உறுதியாய் நின்றனர்.

1961 இல் தமிழரசுக்கட்சி வடக்கு கிழக்கில் சத்தியாக்கிரகம் செய்து அரசாங்க இயந்திரம் ஸ்தம்பிக்கச் செய்திருந்த சமயத்தில் அரச படைகளை நிராயுதபாணிகள்மீது ஏவிவிட்டு அடக்கினார் சிறிமா.

1958 ஆம்ஆண்டில் எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் நிறைவேற்றி தமிழ்மொழி உபயோக சட்டத்துக்கு 1966 ஆம் ஆண்டில் தமிழ்மொழி உபயோக (விசேஷ ஷரத்துக்கள்) மசோதாவை டட்லி சேனநாயகா கொண்டு வந்தபோது சிறிமாவின் சுதந்திரக்கட்சியினர் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்; கொள்ளுப்பிட்டியில் ரத்னசாரதேரோ என்ற பிக்கு துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டார்.

1970 ஆம் ஆண்டில் சிறிமா தலைமையில் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்ததும் இலங்கையைக் குடியரசாக்க புதிய அரசியலமைப்பை, அரசியல் நிர்ணய சபையை, உருவாக்கியபோது தமிழ் மக்களுக்கு உரிமை கிடைக்கக்கூடிய அடிப்படைப் பிரேரணைகளை விவாதிக்காமலே சிங்களக் கட்சிகள் நிராகரித்தன.

1977 ஆம் ஆண்டில் ஜே. ஆர். தலைமையில் யு. என். பி. ஆட்சிக்கு வந்தபோது நாடு முழுவதுமே தமிழருக்கெதிராக இனக்கலகம் தூண்டிவிடப்பட்டது.

1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டுவரை தமிழரின் உரிமைகளைப் பறிக்கும் சட்டங்களும் நடவடிக்கைகளும் சிங்களக் கட்சிகள் போட்டி போட்டு மேற்கொள்ளப்பட்டதுடன் இடையிடையே இனக்கலகத்தை தூண்டி தமிழ் மக்களைக் கொலை செய்து, கொள்ளையடித்து அகதிகளாகவும், அநாதைகளாகவும் சிங்களக் கட்சிகள் ஆக்கிவைத்தன.

இந்நிலையில்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். ஆயுதம் ஏந்தித் தமிழ் மக்களைப் பாதுகாத்துவரும் விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் கலக்கத் தயாராக முன்வந்துள்ளனர்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கினால்தான் ஜனநாயக நீரோட்டத்தில் கலக்க முடியுமென்று விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

இதற்குத்தான் ''வட்டுக்கோட்டைக்கு வழி எதுவென்றால் துட்டுக்குரெண்டு கொட்டைப்பாக்கு'' என்பதுபோல அநுரா பண்டாரநாயக்கா மூன்று நிபந்தனைகள் விதிக்கிறார்.

(1) ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும்.

(2) தமிழர்கள் அல்லாத மற்றைய இனத்தவர்களும் வடக்கு கிழக்கில் வாழ அனுமதிக்க வேண்டும்.

(3) ஒற்றையாட்சி அமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்ற முதல் நிபந்தனைக்கு ஆயுதங்களை ஏன் கீழே வைக்க முடியாதென்பதை மேலே நாம் தெளிவாக பழைய சம்பவங்களை எடுத்துக்காட்டி விளக்கிக் கூறியிருக்கிறோம்.

இதர இரண்டு நிபந்தனைகளைப் பற்றியும் பின்னர் ஆராய்வோம்.

அநுரா ஒரு புறமிருக்கட்டும். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குப் புலிகளை அழைத்த அரசாங்கமும் அநுரா பாணியில் பல்லவி பாடப் போகிறதா அல்லது நிபந்தனைகளை விடுத்து நியாயமாக நடந்துகொள்ளுமா?

''இனப்பிரச்சினையில் இன்னொரு மோதலை நாடு தாங்கிக்கொள்ள மாட்டாது'' என்று நீதி அமைச்சர் சரியாகக் கூறியிருப்பதை சிங்கள அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும்.

களின் கைகளில் இருக்குமெ

தம் எவ்வாறு தனது கொடூரக்

## பரீட்சை...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதாரணங்களைப் பார்ப்போம்.

SPARIUGHY, ESTERN, MASED, FITRE, QUNUES, LEGIOUS – இப்படியான சொற்களை அள்ளித் தெளித்துள்ளார்கள். சொற்கள் என்ன பாஷையோ? இவற்றை விட கேள்விகளில் பல பிழைகள்.

பரீட்சை மண்டபத்தில் கற்றுத் தெரிந்து கொண்ட சாத்தியப்பாடுகளோடு பிழையான கேள்விகளை அணுகும்போது பரீட்சார்த்தி திக்குமுக்காடியிருப்பான். இதைக் கல்வி உளவியல் அறிந்தவர்கள் அறிவார்கள்.

ஆங்கிலத்தையும், விஞ்ஞானத்தையும் ஓர் உதாரணமாகவே தந்தேன். ஆங்கிலம் 'கீங்கில'மாகி விடுகிறது. விஞ்ஞானம் விஞ்ஞானமாக இல்லை. மற்றப் பாடங்களுக்கான வினாத்தாள்களும் அப்படியே.

### வினாத்தாள்களும் புள்ளியிடுதலும்

மாணவ அடைவு சார்பாக ஒரு சோதனையின் மூலம் அளவிடுவதென்றால், வினாத் தாளைத் தயாரித்தளித்தவர் புள்ளியிடும் திட்டத்தையும் வழங்கியிருக்க வேண்டும். 1990ஆம் ஆண்டு முதலாம் தவணைப் பரீட்சை வினாக்களுக்குப் புள்ளியிடும் திட்டம் வழங்கப்படவில்லை. ஆனால், வினாத்தாள்களைப் புள்ளியிடும் ஆசிரியர் ஊகம் மூலம் புள்ளி வழங்கினால் இடத்திற்கிடம், ஆசிரியருக்கு ஆசிரியர் புள்ளியிடுதலில் வித்தியாசம் ஏற்படும். இதே நிலைதான் இப் பரீட்சையில் ஏற்பட்டுள்ளது. இதனால் யாழ். தெற்குக் கொத்தணி, யாழ் நகரக் கொத்தணியில் வழங்கப்பட்ட மதிப்பெண்கள் நம்பகரமானவையல்ல.

★ ஆங்கில வினாத்தாள்களில் 24 பிழைகள் ஒட்டுமொத்தமாகவுள்ளன. சராசரி ஒரு வினாவுக்கு எத்தனை மதிப்பெண்கள் என்பது திட்டவட்டமாகத் தெரியாது. இது இப்படியிருக்க, மாணவன் ஐயந்திரிபின்றி கேள்விகளைத் தெரிந்தெடுக்க முடியாது. பிழையான கேள்விகளைத் தன்னையறியாமலேயே தெரிந்தெடுத்து முயற்சித்திருக்கலாம் நியதியின்படி பிழையான கேள்விகளை முயற்சித்த மாணவர்களுக்கு முழுமையான புள்ளி வழங்கும் முறை கையாளப் படுகிறது. விடைத் தெளிவு, குறிப்பிட்ட பாடத்தைப் பற்றிய பொருள் அறிவு இல்லாத மாணவரும் மிக உயர் புள்ளி பெறும் சந்தர்ப்பம் இங்கு ஏற்படலாம். விஞ்ஞானத்திலும், ஆங்கிலத்திலும்பின் தங்கியநிலையிலுள்ள மாணவர்களும் 50% புள்ளிகளுக்குமேல் எடுத்திருக்க வேண்டும்.

★ 1990 முதலாம் தவணைப் பரீட்சையில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட இடமில்லை. நாட்டு நிலை சுமுகமாக இருந்திருக்கிறது. மாணவர் தவணைமுறையில் செலுத்தும் வசதிக்கட்டணத்தை விடப் பரீட்சைக்கென்று பணம் வேறாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வினாத்தாள்களை ஏனோதானோ என்று தயாரிக்க வேண்டிய அவசியமில்லை. பரீட்சைக் குழுவின் கையிலும் கடித்திருக்காது. சோதனையைஏன் இவர்கள் மாசுபடுத்த வேண்டும்?

★ வினாத்தாள்களில் தவறுகள், பிழைகள் ஏற்படும்போது திருத்தங்களையும் இணைத்து அனுப்புவது நியதி ஜீ.சி.ஈ பரீட்சைகளின்போது இந்த ஒழுங்குதான் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், யாழ்நகரக் கொத்தணி, யாழ் தெற்குக் கொத்தணி இதைப் பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இனி, ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஒரு சோதனையின் நம்பகத்தன்மை, தகுதி, பயன்பாடு இப்பரீட்சையில் விஷ்வாசமாகப் பேணப்படவில்லை. பிரச்சினையை ஆசிரிய கண்ணோட்டத்தில் மட்டும் பாராது, மாணவர்கள் கண்ணோட்டத்தில் பார்த்தால் மாணவரின் பாதிப்பு பற்றித் தெரிந்துகொள்ள முடியும்.

இதுபற்றிய குறைபாடுகள் மேலிடத்துக்குத் தெரிந்தும், இப்பாரிய விஷயத்தில் அவர்கள் கண்மூடி மௌனிகளாக இருக்கிறார்களாம். பூனைக்கு மணி கட்டுவது யார்?

### ஒரு மாணவன் கருத்து

ஒரு மாணவனின் பார்வையில் இச் சோதனை எப்படியிருந்தது என்றுபார்ப்போம்.

ஒரு மாணவன் பரீட்சை ஆரம்பமாகி 40 நிமிடமளவில் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியேறியுள்ளான். மாணவர்களில் அக்கறை உள்ள மேற்பார்வையாளர் (ஆசிரியர்) ''ஏன் இவ்வளவு நேரத்துடன் வெளியேறுகிறாய்? என்றார். மாணவனின் பதில்: ''வினாத்தாளில் கேள்விகளைக் காணவில்லை இருந்து என்ன செய்வது''

இச் சொல்லால் யாழ் நகரக் கொத்தணி, யாழ் தெற்குக் கொத்தணி நடாத்திய சோதனையின் இலட்சணத்துக்கு எடுத்துக்காட்டு,

ஐந்தரை அடி அகலத்திலுள்ள கிடங்கின் 2 அடி உயரமான பகுதி முழுவதையும் 6-8 அங்குல விட்டமுடைய மரக்குற்றிகளை ஒன்றன் மேல்ஒன்றாக மூன்று அடுக்குகளுக்கு குறையாமல் படத்தில் காட்டியவாறு இட்டு நிரப்ப வேண்டும். இதற்கு உங்கள் பகுதியில் கிடைக்கும் வைரமான மரங்களை தெரிவுசெய்து, அவை கறையான் அரிப்பிற்கு ஊடாகாமல் தடுப்பதற்காக சொலிக்கனம் (Solignum) இடப்பட வேண்டும். அது கிடைக்காவிடின் கழிவுஎண்ணெய், தார் முதலியவை கூடப்பூசலாம். இப்போது மரக்கட்டைகளிலான கூரையின் பகுதி முடிவடைந்ததும் அதன் மேல் நீர், மண் என்பன அகழியினுள் செல்லாது தடுப்பதற்காக பொலித்தின் அல்லது கன்வஸ் போன்றவை இடப்பட வேண்டும். பின்பு அதன்மேல் உள்ள ஒன்றரை அடி உயரமான ஆறரை அடி அகலக் கிடங்கானது முற்று முழுதாக மண் இட்டு நிரப்பப்பட வேண்டும் மீண்டும் அதன் மேல் முன்னர் இட்டதை போன்ற நீர் புகவிடாத தடுப்பு ஒன்றுஇடப்பட்டு அதன் மேல் உள்ள 1 அடி உயரமுடைய ஏழரை அடி அகலக் கிடங்கானது சிறு பாறைகள், கற்கள் முதலியவற்றால் நிரப்பப் பட்டு சிறு படை மண் ஒன்றால் மூடப்பட வேண்டும். இதன்மேல் ஏற்கனவே பெயர்த்தெடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படை மண்ணானது முன்பிருந்தது போலவே புற்கள், செடிகளுடன் பதிக்கப்பட வேண்டும். இப்போது அகழ்ந்தெடுக்கப்பட்ட மண் யாதாயினும் வெளியே இருப்பின் அது கவனமாக தொலை துரத்திற்கு அகற்றப்பட வேண்டும்.

இந்த மூடப்பட்ட அகழியின் உட் செல்லுவதக்குரிய பாதையினை ஏற்கனவே வெட்டப்பட்ட பகுதியிலேயே ஒரு கரையில் சிறு பகுதி மூடப்படாமல் விடுவதால் அமைக்கலாம். அல்லது இதனுடன் சேர்ந்தாற் போல் 3x3 அடி அளவினையுடைய ஒரு கிடங்கொன்றுமேலிருந்து அடிவரை படத்திற் காட்டியவாறு அமைக்கப்பட்டிருப்பின் கூட அதனுள் வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஏணியின்மூலம் உள்ளிறங்கக்கூடியதாக இருக்கும். இப்பாதையின் மேற்புறம் கூட சிறு தடிகள், புற்கள், இலைகள் கொண்டு கட்டப்பட்ட மூடி ஒன்றினால் மூடப்பட்டிருக்க வேண்டும் தேவையான போது அதனை திறந்து உள்ளே சென்ற பின்னர் உள்ளிருந்தே அதனை மூடக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

(தொடரும்)

# அவர்கள் ஒன்றுபடலாமே!

ஆசிரியர்

ஈழநாதம்

இலங்கை அரசும் எதிர்க் கட்சிகளும் கொழும்புப்பத்திரிகைகளும் ஒரே குரலில் தமிழ் குழுக்கள் ஒன்று சேரவேண்டும் என குரல் கொடுக்கும் நோக்கம் தானென்ன? நடக்க முடியாததை திரும்பத்திரும்ப கேட்பதன் அர்த்தம் தான் என்ன? தமிழருக்கு எதுவுமே கொடுக்கக் கூடாது என்ற வக்கிர புத்தியா?

தியாகியும் துரோகியும் ஒன்று சேரத்தான் முடியுமா? ஒன்று சேரத்தான் விடுவோமா? எங்களை ஒன்று சேர்த்து வைக்கத்துடிப்பவர்கள், தாங்களே தங்களை அந்த கேள்விகளைக் கேட்டு ஒன்றுபட்டு எமக்கு உதவினால் என்ன? திரு. பிரேமதாசாவும் சிறிமாவும் முதலில் ஒன்று சேர்ந்து எமக்கு உதவலாமே? இவர்கள் இருவரும் சேர்ந்து காரியமாற்றுவார்களானால் இலங்கையில் பிரச்சினை என்ற சொல்லுக்கே இடமேது?

அதை விட்டு விட்டு எப்பவோ செத்த பிணங்களை உயிரூட்டமுயல்வதேன்? இந்தியப்படையின் வாலைப்பிடித்தபடி திரிந்த, தன்வினை தன்னைச் சுடும்என உணர்ந்து உயிர் பெரிதென ஓடி ஒளித்த நரபலிக் கூட்டத்தை இங்கு வரவழைப்பதன் மூலம் எதைத்தான் சாதிக்கப்போகிறார்கள்? அவர்களைக் கொண்டு எம்மை ஆள முடியுமா? புலிகள் தான் மன்னித்தாலும்

## மக்கள் மடல்

மக்கள் மன்னிப்பார்கள் என நினைக்கிறீர்களா? மக்கள் முன் தோன்றி அவர்கள் கதைக்க முடியுமா? என்ன கதைப்பார்கள்? தாங்கள் செய்த கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், பிள்ளைபிடிப்புகள், சித்திரவதைகள், மாணவர் ஆசிரியர் கொலைகள், இவைகளைப் பற்றியா? அல்லது தாங்கள் குடித்து முடித்த போத்தல்களின் எண்ணிக்கை பற்றியா? எதைக் கதைப்பார்கள்? யாராவது விளக்கம் தருவார்களா?

வாசுகி

யாழ். நகர்

பார்ப்பதாகக் காணோம்

பாடசாலைக்குத் தான் மதிய உணவுக்குப் பாண், பணிஸ் கொண்டுபோகக் கூடாது. வீட்டிலுமா பாண்வெறுத்துவிட்டது.

கடைக்காரரிடமே கேட்டேன். பாண் வியாபாரம் குறைந்து விட்டதா என்றேன்.

''முன்னர்விற்றதைவிட இப்பொழுது தினமும் பத்து, பன்னிரண்டு றாத்தல் (இபபொழுதும் பேச்சு வழக்கில் றாத்தல் தான்!) குறைவாகவே விற்கப்படுகிறது'' என்றார்.

காரணம் என்னவென்றேன். ''பாணின் நிறையும் குறைந்து விலையும் அதிகரித்து விட்டது'' என்றார்.

இன்று திங்கட்கிழமை முதல் மாவின் விலையும் பாணின் விலையும் மேலும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இனிப்பாண் விற்கவே முடியாமல் போய்விடும் என்று கவலையுடன் கூறினார் கடைக்காரர்.

பாண் பேக்கரிக்காரர் நிலை கவலைக்கிடம் தான். இனிப் புதியபுதிய உணவுப் பண்டங்களை தயாரிக்க வேண்டியது தான்!

★

மாவை சேனாதிராசா நன்கு அடிபட்ட பெயர். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அவர் வந்து மிக நீண்ட காலமிருக்கும் இப்பகுதியில் என்ன நடக்கிறதென்பதே அவருக்குத் தெரியாது.

இப்பொழுது எப்படியோ அவர் ஒரு எம்.பி யாக இருக்கிறார்.

வடக்கில் புலிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள் என்று அவர் கூறியிருக்கிறார்.

அவர் எங்கேநிற்கிறார்? கூட்டணியின் பெயரே இப்பொழுது யார் யாருக்கோதாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பாவம் மாவை சேனாதிராசா!

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## ஆசிரியா வெற்றிடங்களை பார்வைக்கு வைக்க வேண்டும்

பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களின் வெற்றிடங்கள் அப்பாடசாலைகளில் பகிரங்கமாக வைக்கப்பட வேண்டும் என கல்விச் சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்கள் இதன் மூலம் இந்தப்பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க வசதியாகவே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து விபரங்கள் ஜூன மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக பகிரங்கப் படுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# எம்மை ஏமாற்றி முட்டாளாக்க நினைத்தால்

# எமது புத்திசாதுரியத்தைக் காட்டுவோம்

(இரணைப் பாலை)

இந்த மண் இன்னமும் விடுதலை பெறவில்லை, நாம் இன்னும் விடுதலை பெற வில்லை. கடந்த இரண்டு வருடங்களாக இந்திய வல்லாதிக்கத்தில் இருந்து விடுதலைபெறத் துடிக்கிறது இந்த மண். நாம் இரத்தம் சிந்துவதைத் தவிர்ப்பதற்காக, இளம் சமுதாயத்தின் இழப்புக்களைத் தவிர்ப்பதற்காக, எமது விடுதலையில் நம்பிக்கை வைத்து சிறீலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். நீண்டுகொண்டு போகும் இப்பேச்சுவார்த்தை, அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கும் பேச்சுவார்த்தை எம்மை ஏமாற்ற நினைத்தால், முட்டாள்கள் ஆக்க நினைத்தால் எமது புத்தி சாதுரியத்தை வெற்றி காணும் விடயத்தில் எங்கள் வீரத்தைக் காட்ட வேண்டிய கட்டாயம் எங்களுக்கு உண்டு என கடந்த சனிக்கிழமை இரணப்பாலையில் லெப்டினட் செந்தூரனின் ஓராண்டு நினைவாகத் திறக்கப்பட்ட தூபி திறப்புவிழாவில் கலந்து கொண்டு பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்டப் பொறுப்பாளர் சந்திரன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் வியட்நாமியரின் உறுதியைப் பார்த்தோம் சியூபாவின் புரட்சியைப் படித்தோம் ஒருலட்சம் இந்திய வல்லாதிக்க இராணுவத்தின் மத்தியில் இருந்து போராடி அவர்களுக்கு பாடம் கற்பித்தோம் நீண்ட வரலாறு படைத்த இந்த மண்ணை ஆங்கிலேயர் இடம் இருந்து மீட்டோம் போத்துக்கீசர் ஒல்லாந்தரிடமும் இருந்து மீட்டோம் நீண்ட நாட்களாக எம் மண்மீது நாட்டம் கொண்ட இந்தியரிடம் இருந்தும் மீட்டோம்.

இந்த மண் மீட்பில் மடிந்த வீரவரலாறு படைத்த சமாதியாகி விட்ட லெப்டினன் செந்தூரன் தந்த சுதந்திர பூமியில் இருந்து பேசுகிறோம் ஆயிரத்து தொழாயிரத்து எழுபத்தொராம் (1971) ஆண்டில் சிங்கள இராணுவத்தால் மடிந்த பத்தாயிரம் சிங்கள இளைஞர்களால் எண்பத் தோராம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரிய தொரு வீழ்ச்சியைக் காணக்கூடியதாக இருந்தது. அவ்வாறானால் ஆயிரத்து முன்னூற்றைம்பதுக்கும் மேற்பட்ட போராளிகள் இருபத்தாறாயிரம் மக்களின் இழப்பில் எமது மண் நமது பிரதேசம் பொருளாதாரத்தில் எவ்வவளவு தூரம் பின்நோக்கிச் சென்றிருக்கும். எனவே பொருளாதார விடுதலை பெற இந்த மண் விடுதலை பெற விடிவு பெறுகின்றவரை முடிவு தெரிகின்றவரை போராடுவோம் என்றார். தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சந்திரன் அவர்கள்

### சந்திரன்

கடந்த சனிக்கிழமை இரணப்பாலையில் லெப்ரினன்ட் செந்தூரனின் ஓராண்டு நினைவுத் தூபி திறப்பு விழா வைபவத்தில் மங்கள விளக்கேற்றி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் முல்லை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் 'கைலாஸ்' அவர்கள் உரையாற்றும் போது:

ஒரு நாள் காய்ச்சலில் நிசாந்தன் இறந்து விட்டார். இப்படித்தான் பெண் போராளி தேவிகாவும் இறந்தார். இழப்புக்கள் தொடர்கின்றன. இலங்கை அரசும் பேச்சுவார்த்தையை நீடித்துக் கொண்டே போகிறது. கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் மக்கள் பதட்டத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எல்லைப் பிரதேச மக்களும் அவ்வாறே இந்த மண்ணை, இந்த மக்களை, மக்களின் சுதந்திர உணர்வை, பொருளாதார உணர்வை உணர்ந்து கொண்ட எமது மக்கள் இந்த மண்ணை ஆழவேண்டும். அந்த இலக்கு வெகுதூரத்தில் இல்லை என்றார்.

லெப்ரினன்ட் செந்தூரனின் தந்தையின் தலைமையில் நடந்த நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு பெருந்திரளான மக்கள் வருகை தந்திருந்தார்கள். இரணைப் பாலை, புதுக்குடியிருப்பு பிரதேசமே திரண்டிருந்தது. புலிகளின் சார்பில் சந்திரன், கைலாஸ் ஆகியோருடன் வேறு பிரமுகர்களும் பொது மக்களும்உரையாற்றினார்கள்

குடாநாட்டில்

# மோட்டார் சைக்கிள்கள் அதிகரிப்பு விபத்துக்களும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலமாக புகையிரத போக்குவரத்து சீரானதைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டிற்குள் தினமும் இருபது மோட்டார் சைக்கிள்கள் புதிதாக வந்து சேர்ந்த வண்ணம் இருப்பதாக யாழ்ப்பாணம் மத்திய புகையிரத நிலைய களஞ்சியப் பொறுப்பதிகாரி ஒருவர் தமது மதிப்பீட்டை வெளியிட்டுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் யாழ் மத்திய புகையிரத நிலையத்திற்கு மட்டும் தினமும் மூன்று அல்லது நான்கு மோட்டார் சைக்கிள்கள் வந்திறங்கிய வண்ணம் இருப்பதாகவும் ஏனைய புகையிரத நிலையங்களான கொடிகாமம், சாவகச்சேரி, காங்கேசன்துறை போன்ற புகையிரத நிலையங்களிலும் இதே போல சராசரியாக மோட்டார் சைக்கிள்கள் வந்திறங்கிய வண்ணம் இருப்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும், அவ்வதிகாரி தெரிவித்தார்.

இதே நேரம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அண்மைக் காலங்களில் மட்டும் மோட்டார் சைக்கிள் விபத்து அதிகரித்துள்ளது என வைத்திய சாலை வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. தினமும் யாழ் போதனா வைத்திய சாலையில் ஐந்து அல்லது ஆறு மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தோர் வந்தடைகின்றனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டோர் விபரம் அடங்கிய பதிவுப் புத்தகத்தில் மோட்டார் சைக்கிள் விபத்துப் பற்றிய பதிவு செறிவாகக் காணப்படுவதும் குடுப்பிடத் தக்கதாகும்.

(லோ)

### தங்கக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேகத்தின் பேரில் உதவிச் சுங்க அதிகாரி அத்துல லங்கதேவ சோதித்தபோது இவர் வசம் தங்கம் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. தொடர்ந்து உலோகக் காட்டியின் உதவியுடன சோதனை நடாத்திய போது அவரிடம் உலோகப்பொருள் இருப்பதை உலோகக் காட்டி

### சிகிரியாவில் பொலிஸ் நிலையம்

உல்லாசப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி புதிய பொலிஸ் நிலையம் ஒன்று

### ஏயர் லங்கா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சமயம் இக்கடத்தற் காரநபர் உயர்

### தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கிலங்கையில் தமிழர்-முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்க நீண்ட காலமாகவே பல சக்திகள் செயற்பட்டு வந்தன என்பது இன்று பலரும் அறிந்த உண்மை.

இந்த தீய சக்திகள் கிழக்கிலங்கையை ஒரு ரண களமாக்கின. இனவாதத் தீயை தூண்டிவிட்டன. தமிழர் முஸ்லிம் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், ஒத்திசைவான வாழ்விற்கும் குரல்கொடுத்து வந்த நல்லெண்ண சீலர்களை நய வஞ்சகமாகக் கொலை புரிந்து வந்தன.

சிங்கள இனவாதிகளும், முந்திய இந்திய அரசும், அதன் ஏவல்படைகளும், கைக்கூலிகளும் இதுவரை காலமும் தமிழர் முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்கச் செய்த சதிகளும், நாசவேலைகளும் அதனால் ஏற்பட்டபாரதூரமான விளைவுகளும் அனைவரும் அறிந்த விஷயம்.

தமிழ் முஸ்லிம் மக்கள் ஐக்கியப்பட்ட ஒரு தமிழ் பேசும் தாயகம் அமைந்துவிடக் கூடாது என்பதில் சிங்கள இனவாதிகள் தீவிர அக்கறை காட்டிவருகிறார்கள். பூகோள ரீதியில் தமிழ் பேசும்மக்களின் தாயக பூமியை கபளீகரம் செய்து, இனமோதலைத் தூண்டி, தமிழர் - முஸ்லிம் வேற்றுமையை வளர்ப்பதே சிங்கள இனவாதிகளின் திட்டமாக இருந்து வருகிறது.

தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்த தேசிய விடுதலைப் போராட்டம் வெற்றிபெறக் கூடாது என்பது முந்திய இந்திய அரசின் நிலைப்பாடு. தமிழர் - முஸ்லிம்களைப் பிரித்து, அவர்களது சுய நிர்ணய உரிமைப் போரை நசுக்கிவிட ராஜீவ் அரசு புரிந்த நாசகாரச் செயல்கள் யாவரும் அறிந்ததே.

முஸ்லிம்களின் இரட்சகர்களெனக்கூறி, மதவாத அரசியல் நடத்தி, சுயலாபத்திற்காக, சுய விளம்பரத்திற்காக தமிழ் முஸ்லிம் மக்களை கூறுபோட விளையும் அரசியல்சக்திகளும் இன்று முழு மூச்சாக செயல் பட்டுவருவதை தமிழீழமக்கள் நன்கு அறிவார்கள்.

இந்திய இராணுவம் முஸ்லிம்மக்களை மிருகத்தனமாக கொலைசெய்து அழித்தது. இவர்கள் மௌனம் சாதித்தார்கள்.

இந்திய இராணுவத்தின் கூலிப்படைகள் அப்பாவி முஸ்லிம்களை அநியாயமாகக் கொன்று குவித்தது. இவர்கள் மௌனம்சாதித்தார்கள்.

சிங்கள இனவாதப் பூதம் முஸ்லிம்களின் தாய் மண்ணை குடியேற்றம் மூலம் விழுங்கி வருகிறது. இவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முஸ்லிம்களின் உரிமைக்காக குரல் கொடுத்தது. முஸ்லிம்களுக்கு எதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களை அம்பலப்படுத்தியது. சிங்கள இனவாத சக்திகளுக்கு எதிராக, இந்திய ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக, இந்திய கைக்கூலி ஆயுத குழுக்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராடியது.

தமிழர் முஸ்லிம் தாயகமாக வடகிழக்குப் பிரதேசம் பாதுகாக்கப்படவேண்டும்; தமிழரும் முஸ்லிம்களும் ஒரே சக்தியாக ஒன்றிணைந்து போராட வேண்டும்; முஸ்லிம் மக்களின் கலாசார தனித்துவம் பேணப் படவேண்டும்; முஸ்லிம் மக்கள் தமது பிரதேசங்களில் சுதந்திரமாக; கௌரவத்துடன் பாதுகாப்பாக வாழவேண்டும்; என்ற ரீதியில் முற்போக்கான கொள்கைத் திட்டங்களை முன்வைத்து விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்கள் மத்தியில் வேலை செய்யத் தொடங்கினர். முஸ்லிம் மக்கள் மத்தியில் ஆதரவையும் பெற்றனர். முஸ்லிம் தமிழரின் ஒற்றுமையை விரும்பிய முஸ்லிம் முற்போக்காளர் பலர் புலிகளின் அரசியல் அமைப்பில் இணைந்து செயற்படத் தொடங்கினர்.

தமிழர் முஸ்லிம்களை ஒன்றிணைக்கும் சக்தியாக, ஒரு தேசிய விடுதலை சக்தியாக புலிகள் இயக்கம் முஸ்லிம்மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவதை பிற்போக்குவாத, அரசியல் கட்சிகள் விரும்பவில்லை. விடுதலைப்புலிப்போராளிகளையும், ஆதரவாளர்களையும் கொலை செய்து அழிக்க முற்பட்டார்கள். இந்தப் பின்னணியில்தான் எமது தோழர் ஆதம்பாவாவும் கொலைசெய்யப்பட்டார்கள்.

இந்த அற்புதமான தியாகிக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்திக் கொள்கிறோம். அவரது உயிர் அழிந்தாலும், அவரது இலட்சியம் என்றும்அழியப்போவதில்லை.

### சாதாரண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டணம் இரண்டு மடங்காக்குவதற்கு முன்பிருந்ததை விட பெருமளவு குறைந்துள்ளதாக ரயில்வே களஞ்சியப் பகுதியிலிருந்து தெரியவருகிறது.

(லோ)

# காரைநகர் கடற்படை

# ஒருலட்சம் ரூபா பெறுமதியான

தாக யாழ்ப்பாணம் மத்திய புகையிரத நிலைய களஞ்சியப் பொறுப்பதிகாரி ஒருவர் தமது மதிப்பீட்டை வெளியிட்டுள்ளார்.

### தங்கக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேகத்தின் பேரில் உதவிச் சுங்க அதிகாரி அத்துல லங்கதேவ சோதித்தபோது இவர் வசம் தங்கம் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. தொடர்ந்து உலோகக் காட்டியின் உதவியுடன சோதனை நடாத்திய போது அவரிடம் உலோகப்பொருள் இருப்பதை உலோகக் காட்டி சமிஞ்ஞை செய்தது. சங்கிலியில் கோர்த்துத் தங்கத் துண்டுகளை ஒளித்து வைத்திருப்பதை கடத்தல் காரர் ஒத்துக்கொண்டார். அவர் வசமிருந்து தங்கச் சங்கிலிகளும், ஆறு தங்கத் துண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

### முல்லைத் தீவில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டனர்.

சில அபிவிருத்தி நடவடிக்கைகளை இங்கு மேற்கொள்ளவும் போரூட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

### ஸ்ரீலங்கா

(5ஆம் பக்கத்தொடர்ச்சி)

4) முஸ்லிம் விரோத இஸ்ரேலிய மொஸாட்டின் ஆலோசனைப்படி ஸ்ரீலங்கா அரசால் உருவாக்கப்பட்ட 'ஜிகாத்' அமைப்புடன் மறை முகமாக இணைந்து செயற்படுகின்றமை.

5) தமிழ்-முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளை மீறுகின்ற அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை

6) தங்கள் தலைமையினைக் காப்பாற்றிக்கொள்ள தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையினைச் சிதைக்கமுயற்சிக்கின்றமை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் விடிவிற்காக எவ்வித அர்ப்பணிப்பிற்கும் தயாராகவில்லை என்பதனையும் இவர்களது உரிமைக்கோஷம்தங்கள் தலைமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே என்பதனையும் முஸ்லிம் மக்கள் விளங்கிக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். இதன் வெளிப்பாடாக இன்று முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளுடன் தம்மை இணைத்து வருகின்றனர்,

(தொடரும்)

ரத நிலையங்களான கொடிகாமம், சாவகச்சேரி, காங்கேசன்துறை போன்ற புகையிரத நிலையங்களிலும் இதே போல சராசரியாக மோட்டார் சைக்கிள்கள் வந்திறங்கிய வண்ணம் இருப்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும், அவ்வதிகாரி தெரிவித்தார்.

இதே நேரம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய ஆறு மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்தோர் வந்தடைகின்றனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோர் விபரம் அடங்கிய பதிவுப் புத்தகத்தில் மோட்டார் சைக்கிள் விபத்துப் பற்றிய பதிவு செறிவாகக் காணப்படுவதும் குடுப்பிடத்தக்கதாகும்.

(லோ)

## சிகிரியாவில் பொலிஸ் நிலையம்

உல்லாசப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி புதிய பொலிஸ் நிலையம் ஒன்று சிகிரியாவில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது மாத்தளைப் பாராளுமன்ற உறுப்பினரும், தபால் தொலைத் தொடர்பு அமைச்சருமான அலிக் அலுவிஹாரவும், பொலிஸ் உயர் அதிகாரிகளும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்

### ஆயுதக் கையளிப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளிப்பை அவர்கள் இதுவரை முன் நிபந்தனைகளை வைக்கவில்லை'' என்று கூறினார்.

''அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா அயுதக் கையளிப்பு சம்பந்தமாக பல தடவைகள் குழப்பகரமாக அறிக்கைகள் வெளியிட்டு வருவது சகலரும் அறிந்த விசயம். ஆயுதம் சம்பந்தப்பட்ட மட்டில் நாம் எமது நிலைப்பாட்டை பல தடவைகள் தெளிவாக விளக்கியிருக்கிறோம். தலைவர் பிரபாகரன் சமீபத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பேசும்பொழுது தமிழர் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று ஏற்படுபவரை ஆயுதக்கையளிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை எனத் தெட்டத் தெளிவாக கூறியிருக்கிறார். இதுவரை அரசு ஆயுதங்களை கையளிக்குமாறு உத்தியோக பூர்வமான முறையில் கேட்கவில்லை என்று அப்படியான நிபந்தனை முன்வைக்கப்படுகிறதோ அன்றிலிருந்து பேச்சுக்கள் முறிவடையும் ஆபத்து ஏற்படலாம்'' என்று அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்கும் பிரேரணைக்கு ஆதரவு அளிப்பதானால் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என அனுரா விதித்த நிபந்தனை பற்றி கேட்டபோது ஆறாவது சட்டத்திருத்தத்திற்கும் ஆயுதங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனப் பாலசிங்கம் குறிப்பிட்டார்.

### ஏயர் லங்கா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சமயம் இக்கடத்தற் காரநபர் உயர் வர்த்தகர்கள் போல மிகவும் ஆடம்பரமாக உடையணிந்து காணப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### இந்தியாவும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டால் உபகண்டம் அழிந்து விடும் ஆபத்து உள்ளதாக சோவியத்தும் அமெரிக்காவும் கவலை கொண்டுள்ளன.

### கோட்டை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஈடுபட்டு வருவதும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

1987ஆம் ஆண்டுக்கு முன்பிலிருந்தது போல மீண்டும் இந்த காவலரண்களை புனரமைப்பதானது யாழ். மாநகரப் பகுதி மக்களை பல்வேறு சந்தேகங்களுக்குள்ளாகி வருவதும் குறிப்பிடக் கூடியதாகும்,

(லோ)

### யாழ் ஆஸ்பத்திரி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவாதம் அளிக்கப்பட்டதாகவும், இக் கூட்டத்துக்கு சென்று வந்த அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இருந்தும் மீண்டும் தாம் கொழும்பில் தயாரித்து சமர்ப்பித்த ஆலோசனை அறிக்கையை இங்கு யாழ். வைத்தியசாலையில் உள்ள ஏனைய அதிகாரிகளுடன் மேலும் ஆலோசனைகள் நடத்தி இங்குள்ள தொழிலாளர் குறைபாடுகள், உடனடியாக பெற வேண்டிய மருந்து வகைகள் தகுந்த நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாமை, போன்ற பல பிரச்சினைகள். அடங்கிய அறிக்கை ஒன்று தயாரித்து சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க உள்ளதாகவும் இக் கொழும்புக் கூட்டத்திற்கு சென்று வந்த அதிகாரி தெரிவித்தார்.

(லோ)

றைம்பதுக்கும் மேற்பட்ட போராளிகள் இருபத்தாறாயிரம் மக்களின் இழப்பில் எமது மண் நமது பிரதேசம் பொருளாதாரத்தில் எவ்வளவு தூரம் பின்நோக்கிச் சென்றிருக்கும்.எனவே பொருளாதார விடுதலை பெற இந்த மண் விடுதலை பெற விடிவு பெறுகின்றவரை முடிவு தெரிகின்றவரை போராடுவோம் என்றார்.தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சந்திரன் அவர்கள்

கொண்ட எமது மக்கள் இந்த மண்ணை ஆழவேண்டும். அந்த இலக்கு வெகுதூரத்தில் இல்லை என்றார்.

லெப்ரினன்ட் செந்தூரனின் தந்தையின் தலைமையில் நடந்த நினைவஞ்சலிக் கூட்டத்திற்கு பெருந்திரளான மக்கள் வருகை தந்திருந்தார்கள். இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு பிரதேசமே திரண்டிருந்தது. புலிகளின் சார்பில் சந்திரன், கைலாஸ் ஆகியோருடன் வேறு பிரமுகர்களும் பொது மக்களும்உரையாற்றினார்கள்

முஸ்லிம் மக்களை கூறுபோட விளையும் அரசியல்சக்திகளும் இன்று முழு மூச்சாக செயல்பட்டுவருவதை தமிழீழமக்கள் நன்கு அறிவார்கள்.

இந்திய இராணுவம் முஸ்லிம்மக்களை மிருகத்தனமாக கொலைசெய்து அழித்தது. இவர்கள் மௌனம் சாதித்தார்கள்.

இந்திய இராணுவத்தின் கூலிப்படைகள் அப்பாவி முஸ்லிம்களை அநியாயமாகக் கொன்று குவித்தது. இவர்கள் மௌனம்சாதித்தார்கள்.

சிங்கள இனவாதப் பூதம்

கிக்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்திக் கொள்கிறோம். அவரது உயிர் அழிந்தாலும், அவரது இலட்சியம் என்றும்அழியப்போவதில்லை.

### சாதாரண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டணம் இரண்டு மடங்காக்குவதற்கு முன்பிருந்ததை விட பெருமளவு குறைந்துள்ளதாக ரயில்வே களஞ்சியப் பகுதியிலிருந்து தெரியவருகிறது.

(லோ)

# காரைநகர் கடற்படை சிப்பாய் தெகிவளையில்கைது!

## பல இடங்களில் கொள்ளை!!

(கொழும்பு)

தெகிவளையில் மோட்டார் சைக்கிள் ஒன்றைக் கடத்திச் செல்ல முயன்ற இருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிருவரும் கடற்படையைச் சேர்ந்தவர்களென்றும் காரைநகர்கடற்றுபடைமுகாமில் கடமையாற்பவர்களென்றும் விசாரணையில் தெரியவந்தது. இவர்களில் ஒருவரிடமிருந்து எறிகுண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

### எம்பிலிப்பிட்டியாவில் வழிப்பறி

எம்பிலிப்பிட்டியாவில் ஆயுதந்தாங்கிய ஆறுபேர் கொண்ட கோஷ்டியொன்று லொறியொன்றை மறித்து எண்பத்திநான்காயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றது.

### நித்தம்புவவில் கொள்ளை

கங்கொடவில என்ற பகுதியில் வீடொன்றினுள் புகுந்த ஆயுதந்தாங்கிய ஆறுபேர் கொண்ட கோஷ்டியொன்று ரொக்கப்பணமும், நகைகளுமாக மூன்றரை லட்சம் ரூபாய் வரை கொள்ளையடித்து சென்றது.

நித்தம்புவவில் வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் வான் ஒன்றை ஆயுதம் தரித்த கோஷ்டியொன்று வழி மறித்து ஒன்றே கால்லட்சம் ரூபாயைக் கொள்ளையடித்துச் சென்றது.

### இன்று புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் சார்பில் யோகரெட்ணம் யோகி, அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள் எனத் தெரிகிறது. இப்பேச்சு வார்த்தையின் போது நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத்தும் உடன் இருப்பார் இப்பேச்சு வார்த்தையின் போது வடக்கு, கிழக்கு பகுதிகளின் பாதுகாப்பு நிலைமை பற்றியும் அண்மையில் ஏற்பட்டுவரும் இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைகள் பற்றியும் பேசப்படலாம் என அறியவருகின்றது.

### விபத்தில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செ. செல்வராஜா வயது 32 என்பவரும் கு. குணசேகரம் வயது 34 என்பவருமே நேற்று மத்தியானம் நடந்த இவ் வாகன விபத்தில் காயமடைந்தோராவர் இவர்கள் இருவரும் விபத்து நடந்த இடத்திலிருந்து மந்திகை வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இவர்களில் செல்வராஜா என்பவர் மிக மோசமான நிலையில் உள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

(லோ)

### பெண்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் யாப்பு உருவாக்க மாநாட்டில் உரைநிகழ்த்தும்போது குறிப்பிட்டார். மூன்று நாட்களாக தொடர்ந்து நடைபெறவிருக்கும் இம்மாநாட்டிற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு உறுப்பினரும் முன்னணியின் உப செயலாளருமான செல்வி சுந்தரி தலைமைவகித்தார்.

''தமிழீழப் பெண்கள்இன்று விடுதலைப் போராட்ட களத்தில் குதித்திருக்கிறார்கள். மகளிர் படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு பெண்கள் ஆயுதம் தரித்து ஆண்களுடன் சரிநிகராகப் போராடும் அளவிற்கு எமது போராட்டத்தில் புரட்சிகரமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது''

''தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பங்குகொள்ளுவதற்கு இன்று பெருந்தொகையான பெண்கள் முன்வந்துள்ளனர். தேசிய, சமூக ஒடுக்குமுறை எழுந்த எதார்த்தப் புறநிலைகளும், வரலாற்று நிர்ப்பந்தங்களுமே தமிழீழப் பெண் இனத்தை போராட்டப் பாதையில் தள்ளியது எனலாம். எமது தலைவர் திரு. பிரபாகரன் தமிழீழப் பெண்களின் விடுதலைக்கு முக்கியத்தும் அளித்தார். ஆண்களுக்கு சரிநிகராகப் பெண்களும் ஆயுதமேந்திப் போராட வேண்டும் என்றபுரட்சிகரமான கருத்தை அன்றுதொட்டு வலியுறுத்தி வந்தார். அவரது புரட்சிகர சிந்தனையின் வடிவமாகவே இன்று எம்மத்தியில் பெண் போராளிகளைக் கொண்ட இராணுவ அரசியல் அமைப்புகள் தோற்றம் கொண்டுள்ளன,''

இவ்வாறு திரு. மகேந்திரராசா எடுத்துரைத்தார்.

யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி பானு வரவேற்புரை நிகழ்த்தினார்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினரான செல்வி கீதா யாப்புவின் அடிப்படைக் கொள்கைகளையும் சட்டவிதிகளையும் அறிமுகம் செய்து விவாதத்தை ஆரம்பித்துவைத்தார்.

யாப்பு உருவாக்க விவாதத்தில் பங்குபற்றிப் பேசிய மகளிர் முன்னணியின் பிரதம இணைப்பாளரான செல்வி. ஜெயா பெண்கள் விடுதலை என்றபோர்வையில் இதுவரை காலமும் இயங்கிவந்த சில மாதர் அமைப்புக்களின் போலியான கருத்துக்களையும், தவறான நடைமுறைகளையும் கண்டித்தார். பெண் விடுதலை என்றபுனித இலட்சியத்திற்கு இவர்களது போக்கும் செயலும் களங்கம் ஏற்படுத்தியது என்றும் குற்றம் சாட்டினார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திருமதி அடேல் பாலசிங்கம், யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக் யாழ். மாவட்ட மகளிர் படைப்பிரிவு தளபதி செல்வி. ஜெயந்தி ஆகியோரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். சகல மாவட்டங்களிலிருந்தும் மகளிர் முன்னணி பிரதிநிதிகள் பலரும் இம்மாநாட்டில் பங்குபற்றினர்.

இந்த யாப்பு மாநாடு இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறும்.

## ஒருலட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கல்கடத்தல்

(கொழும்பு)

சீனப் பிரஜை ஒருவர் இலங்கையிலிருந்து சீனா திரும்பும் போது ரூபா 100,000 பெறுமதியான இரத்தினக்கற்களை கடத்திச் செல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சி கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில்வைத்துமுறியடிக்கப்பட்டது. இரத்தினக் கற்களை அவர்தன் வசம் ஒளித்து வைத்திருந்த சமயம் சுங்கப்பரிசோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டது.

சுங்கப்பகுதியினருக்கு அவர் வெளிப்படுத்தியதை விட மேலதிகமான அமெரிக்க டாலர்களையும் வைத்திருந்தாராம். விசாரணை தொடர்கிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.